Verité Research
Strategic Analysis for Asia

National Christian Evangelical Alliance
Sri Lanka



# செயற்பாடின்மை மற்றும் தண்டனையிலிருந்து விலக்களிப்பு:

## கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் மத வன்முறைச் சம்பவங்கள்

2015 - 2019

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் (NCEASL) வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெரிட்டே ரிசேர்ச்சினால் (Verite Research) இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

வெரிட்டே ரிசேர்ச்சுக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் இலங்கை தேசியக் கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் பிரத்தியேக அறிவுசார் சொத்துரிமையைக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையின் பகுப்பாய்வு தொடர்பில் வெரிட்டே ரிசேர்ச் அனைத்து அறிவுசார் சொத்துரிமைகளையும் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையைப் பொறுத்தவரை, தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் மாத்திரமே விநியோக உரிமையைக் கொண்டுள்ளது.

# அங்கீகாரம்

இந்த ஆய்வு இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் (NCEASL) சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் மூன்று பரந்த பகுதிகளில் தனது பங்களிப்பினை வழங்குகின்றது: இறை பணி மற்றும் இறையியல், மத சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள், நிவாரணம் மற்றும் அபிவிருத்தி. 129 நாடுகளில் 620 மில்லியனுக்கும் அதிகமான கிறிஸ்தவர்களைக் கொண்ட உலகளாவிய வலையமைப்பான சர்வதேச சுவிசேஷக ஐக்கியத்துவத்துடன் (WEA) இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் இணைக்கப்பட்டுள்ளது. சமூக மாற்றம், மத சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர் தேசமான்ய கொட்.ஃபிரி யோகராஜா அவர்களினால் இலங்கை சுவிசேஷக ஐக்கியத்துவம் வழிநடத்தப்படுகின்றது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் மத சுதந்திர ஆணையம் (RLC), இலங்கையிலுள்ள கிறிஸ்தவ சமூகம் மீதான வன்முறைச் சம்பவங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பாரபட்சமான நடவடிக்கைகள் குறித்து கண்காணிப்பதுடன், ஆவணப்படுத்தி வருகின்றது. பரிந்துரைத்தல் மற்றும் ஆதரவளித்தல், ஆய்வு மற்றும் ஆவணப்படுத்துதல், பயிற்சி மற்றும் கல்வியின் மூலம் அனைத்து இலங்கையர்களினதும் மத சுதந்திரத்தை மேம்படுத்துவதே மத சுதந்திர ஆணையத்தின் நோக்கமாகும்.

இந்த ஆய்வு வெரிட்டே ரிசேர்ச்சின் ஊடகப் பிரிவினால் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் நூலாசிரியர் மஹோஷாதி பீரிஸ். இந்தக் குழுவில் மிஹிந்து பெரேரா மற்றும் ஜோனதன் குருஸ் ஆகியோர் உள்ளனர். ஆசிரிய வழிகாட்டுதல்கள் கிஹான் குணதிலக்க, தீபாஞ்சலி அபேவர்த்தன, சலானி ரணவல, ஷமாரா வெத்திமுனி, ஸ்டெபானி நிக்கோல் மற்றும் ஹஸ்னா முனாஸ் ஆகியோரினால் வழங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சிக்கான முழுமையான மேற்பார்வையினை நிஷான் டி மெல் மற்றும் கிஹான் குணதிலக்க வழங்கியுள்ளனர். இன்போகிராபிக்ஸ் நிலங்கிக பெர்னான்டோ வழங்கியுள்ளதுடன், தினுக் சேனாபத்திரன வடிவமைத்துள்ளார். றோச்செல் கனகசபே அறிக்கையை தொகுப்பதற்கு உதவியுள்ளார். வரைவுகள் மற்றும் கருத்துக்களை மீளாய்வு செய்ததற்கும், அவர்களுடைய யோசனைகளை முன்வைத்ததற்கும் தங்களது பெறுமதியான நேரத்தை ஒதுக்கியமைக்காக நூலாசிரியர் மேலே குறிப்பிட்டுள்ளவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளார்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 5 |
| நிறைவேற்றுச் சுருக்கம் | 7 |
| அறிமுகம் | 9 |
| சமூக - அரசியல் சூழ்நிலையின் ஆய்வு | 11 |
| கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைப் போக்கின் ஆய்வு | 14 |
| அரசாங்கத்தின் பங்கு | 20 |
| மாவட்ட ரீதியாக வன்முறைச் சம்பவங்களின் புவியியல் பரவல் | 25 |
| முஸ்லிம் மற்றும் இந்துக்கள் மீதான இன - மத வன்முறைகளின் பகுப்பாய்வு | 32 |
| முடிவுரை | 39 |
| பின்னிணைப்பு | 41 |
| ஆய்வுமுறை மற்றும் சம்பவங்களின் வகைப்படுத்தல் | 45 |
| உசாத்துணைகள் | 49 |

# முன்னுரை

கடந்த சில வருடங்களாக, இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றது. இலங்கை அரசியலமைப்பில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், உலகளாவிய ரீதியில் அடிப்படை மனித உரிமைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்ற போதும், அனைத்து பிரஜைகளினதும் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான இலங்கையின் முயற்சிகள் போதுமானதாக இல்லை.

2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் இந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் வெளியிட்ட 20 வருட பகுப்பாய்வு அறிக்கையின் தொடர்ச்சியாக இது உள்ளது. இந்த ஆய்வில், கிறிஸ்தவர்களுக்கு எதிரான மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை மீறிய 397 சம்பவங்கள், முஸ்லிம்களுக்கு எதிரான பல கலவரங்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்துக்களுக்கு எதிரான பாரபட்சமான சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படுகின்றது.

கவலை தரும் விதமாக, சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக மதம் அல்லது நம்பிக்கை சுதந்திர மீறல்களில், செயற்படுவதன் மூலமாகவோ அல்லது செயற்படாமலோ அரச அதிகாரிகள் ஈடுபடுவதில் காணப்படும் அதிகரித்த போக்கினை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் அரசாங்கத்தின் செயற்பாடு அல்லது செயற்பாடின்மை காரணமாக மத வன்முறை மாறாமல் தொடர்ந்தும் நீடிக்கின்றது. எனவே இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் அதிகமாக செயற்பட வேண்டியுள்ளது என்பதற்கு இந்த ஆய்வு சான்றாக உள்ளது.

அதிகரித்துவரும் தீவிரவாதம் மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், சிறுபான்மை மதத்தவர்களுக்கு முன்னுள்ள பாதை மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்றது. எனவே இலங்கையின் சிறுபான்மை மதத்தவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டு முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது. இந்த ஆய்வறிக்கையானது மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தின் தற்போதைய நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், இந்த விடயம் தொடர்பில் தேவைப்படும் உரையாடல் மற்றும் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும் என நாங்கள் நம்புகின்றோம்.

இந்த ஆய்வானது, இதனை முன்னெடுத்த வெரிட்டே ரிசேர்ச்சின் பங்களிப்பு இல்லாமல் சாத்தியம் இல்லை. அத்துடன் வழிகாட்டுதல்களை வழங்கிய தேசிய சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் பொதுச்

செயலாளர் தேசமான்ய கொட்.ீ.பிரி யோகராஜா அவர்களுக்கும், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய இலங்கை தேசிய சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் ஆய்வு மற்றும் ஆவண ஒருங்கிணைப்பாளர் அனௌச்கா விஜேசிங்க அவர்களுக்கும் நான் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த திட்டத்திற்கு ஆதரவளித்த கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

*யாமினி ரவீந்திரன்*
*பணிப்பாளர் - சட்டத்தரணி*
*இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம்*

# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கையில் இன - மத வன்முறையானது நீண்டகால மற்றும் முறைப்படுத்தப்பட்ட பிரச்சினையாக உள்ளது. ஜனவரி 2015 ஆம் ஆண்டில் முன்னைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போதும் இந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடித்துக்கொண்டேயுள்ளது.[1] இலங்கையிலுள்ள சிறுபான்மையின கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக் குழுக்களினால் எதிர்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் முக்கிய போக்குகள் மற்றும் சவால்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை இந்த ஆய்வு முன்வைக்கின்றது. இந்த ஆய்வு முறையானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியது: (1) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் (NCEASL) தொகுக்கப்பட்ட அறிக்கைகளின் மீளாய்வு, மற்றும் (2) இலங்கையின் சிறுபான்மையினர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் இன - மத மோதல்கள் தொடர்பான இரண்டாம் நிலைத் தரவுகளின் மீளாய்வு.

இந்த ஆய்வில் 2015 ஜனவரி முதல் 2019 ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான மொத்தம் 397 வன்முறைச் சம்பவங்கள் ஆராயப்படுகின்றன. 2010 - 2014 ஐந்தாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறான சம்பவங்களில் உடனடி வீழ்ச்சி காணப்படுவதை அறிய முடிகின்றது. உடல் ரீதியான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்ததே இந்த வீழ்ச்சிக்குக் காரணம். எனினும், கிறிஸ்தவர்களுக்கு எதிரான 87 சதவீதமான உடல் ரீதியற்ற சம்பவங்களில் முக்கியமாக வழிபாட்டுத்தலங்களையும், மத போதகர்களையும் இலக்கு வைத்து பாரபட்சமான செயல் அல்லது நடைமுறைகள் இடம்பெற்றுள்ளன. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட இந்த சம்பவங்களின் பின்னணியில் முக்கிய குற்றவாளிகளாக அரச அதிகாரிகள் இருந்துள்ளனர்.

2015 ஜனவரி முதல் 2019 ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட மத வன்முறைகளை முன்னெடுப்பதிலும், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அரசாங்கம் முக்கிய பங்கு வகித்துள்ளது. இதற்கு முன்னரான ஐந்தாண்டு காலப்பகுதியிலும் (2010 - 2014) அரசாங்கத்தின் ஈடுபாடு அதுபோன்றே காணப்பட்டது. அனைத்து வன்முறைச் சம்பவங்களிலும் 40 சதவீதத்திற்கும் அதிகமானவற்றில் அரச அதிகாரிகளே முக்கிய குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். மேலதிகமாக, பௌத்த பிக்குகள் போன்ற அரசாங்கத்தைச் சாராதவர்களினால் முன்னெடுக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்களை காவற்துறை கண்டுகொள்ளாத நிலைமை குறித்தும் இந்த ஆய்வு பதிவு செய்கின்றது. கிறிஸ்தவர்கள் தங்களுடைய மத நம்பிக்கைகளை முன்னெடுப்பதற்கான உரிமையை மதிப்பதற்கும், அரசு சாராதவர்களின் மீறல்களில் இருந்து அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும்

அரசாங்கம் தவறியுள்ளது.

2015 - 2019 காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டமாக மட்டக்களப்பு உள்ளது, இதற்கு அடுத்ததாக பொலனறுவை உள்ளது. எனினும், கிறிஸ்தவ சனத்தொகை பொலனறுவையில் குறைவாக காணப்பட்டாலும் இதற்கு முன்னரான ஐந்தாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பு அதிக சதவீதத்தில் (400 சதவீதத்தால்) உள்ளதை மேலதிக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. மேலும், மத வன்முறைச் சம்பவங்களின் வருடாந்த வீதத்தில் பொலனறுவை உச்ச அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

மீளாய்வு செய்யப்படும் இந்தக் காலப்பகுதியில், பொலனறுவை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் முகங்கொடுக்கும் மத வன்முறைகள் அதற்கு முன்னைய காலப்பகுதியுடன் (2010 - 2014) ஒப்பிடுகையில் சுமார் ஐந்து தடவைகள் அதிகமாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில், இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் பல மோசமான வன்முறைச் சம்பவங்களை எதிர்கொண்டது.[அ] இதில் ஜின்தோட்ட (நொவம்பர் 2017), அம்பாறை (பெப்ரவரி 2018), திகன/தெல்தெனிய (மார்ச் 2018) மற்றும் குருநாகல்/மினுவாங்கொடயில் (மே 2019) இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களும் அடங்கும். இதேவேளை, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள இந்துக்கள், இந்த பகுதிகளில் “சிங்களமயமாக்கல்/ பௌத்தமயமாக்கல்” சம்பவங்களைத் தொடர்ந்து பாகுபாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த சம்பவங்கள் இலங்கையில் இன - மத வன்முறைகளை நிகழ்த்துவதற்கு சமூக - அரசியல் மற்றும் கலாச்சார காரணிகள் எவ்வாறு ஆழமாக உள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றன. பெரும்பான்மை சமூகத்தினரின் உரிமை மனோபாவம் மற்றும் தேசியவாதக் குழுக்களினால் சுரண்டப்படும் இருத்தலியலுக்கான அச்சங்களை இவை உள்ளடக்கியுள்ளன. பெரும்பான்மை சிங்கள - பௌத்த இன - மத குழுக்களினால் அச்சுறுத்தல் அல்லது பாதுகாப்பின்மை உணரப்படும் போது எதிர்வினையாக இந்த வன்முறைகள் கட்டவிழ்க்கப்படுவதை இந்தக் காரணிகள் சுட்டிக்காட்டுகின்றன.

இறுதியாக, இன - மத வன்முறைகளுக்கு காரணமான இந்த அடிப்படைக் காரணிகள் அனைத்து மட்டங்களிலும் “நிறுவன அழிவுக்கு” காரணமாக அமைவதை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது.[2] இந்த அமைப்பின் சிதைவு சிறுபான்மை குழுக்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பெரும்பான்மை இன - மத குழுக்களுக்கு பக்கச்சார்பாக செயற்படும் வகையில் அரச அறிவுறுத்தல்கள் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளையும் தூண்டுகின்றது என வாதிடப்படுகின்றது. இன - மத வன்முறை நடவடிக்கைகளில் அரசின் செயலற்ற தன்மைக்கு அரச நிறுவனங்களில் உள்ள சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதமே காரணமாக இருக்கக்கூடும்.

(அ) இந்த ஆய்வில் “மோசமான” வன்முறை என்பது பரவக்கூடிய பண்பையும், தீவிரத்தன்மை கொண்டதாகவும் விவரிக்கப்படுகின்றது.

# அறிமுகம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ ஆட்சிக்காலத்தில், இலங்கையில் பௌத்த தேசிய இயக்கங்கள் அதிகமானதுடன், அவர்கள் தண்டனையின்றி சுதந்திரமாக செயற்பட்டு வந்தனர்.[3] பௌத்த தேசிய இயக்கங்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரமானது இன - மத வன்முறைகளை தூண்டுவதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆதரவு எனக் கருதமுடியும்.[4] எனவே, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஸ தோற்கடிக்கப்பட்ட போது நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல் மற்றும் பன்மைத்துவ ஜனநாயகம் உருவாகும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.[5] எனினும், 2015 ஜனவரியில் ஜனநாயக மாற்றம் நிகழ்ந்த போதும் காலம் காலமாக நிலவிய இன - மத வன்முறைகள் இலங்கையில் தொடர்ந்தன.[6]

இந்த ஆய்வானது இலங்கையில் போருக்குப் பின்னரான சூழலை ஆராய்வதுடன், 2015 முதல் 2019 வரையில் சிறுபான்மை மதக் குழுக்களுக்கு எதிரான மத வன்முறைச் சம்பவங்களை ஆராய்கின்றது. இந்த ஆய்வின் நோக்கத்திற்கு, சிறுபான்மை மதக் குழுக்களில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் சனத்தொகையில் 30 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளனர். மேலும், "வன்முறை" என்ற சொல்லுக்கான விவாதத்தைக் கருத்தில் கொள்ளும் போது, இந்த ஆய்வானது மத வன்முறை என்பதை உடல் ரீதியான, உடல் ரீதியற்ற மற்றும் கட்டமைப்பு வடிவங்களை உள்ளடக்கிய வன்முறை என்ற பரந்த வரையறையை ஏற்றுக்கொள்கின்றது.[7] எனவே இந்த வரையறையின் கீழ்: சொத்துக்களை சேதப்படுத்துதல் அல்லது அழித்தல், நபர்/களுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை, வெறுக்கத்தக்க பேச்சு, அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் அல்லது வற்புறுத்தல் மற்றும் கட்டமைக்கப்பட்ட பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை என்பவற்றைக் கொண்டுள்ளது.

இந்தப் பின்னணியில், இந்த ஆய்வானது 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் சிறுபான்மை மதக் குழுக்கள் மீதான வன்முறைச் சம்பவங்களை ஆராய்கின்றது. மேலும், 2015 ஆம் ஆண்டில் *யஹபாலனய* (நல்லாட்சி) அரசாங்கத்தை அமைத்த போதும் இன - மத வன்முறைகள் தொடர்ந்தன என்பதை விளக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வன்முறையை செயல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு பங்கு உள்ளது அல்லது தனது செயலற்றதன்மை காரணமாக குற்றவாளிகளுக்கு சுதந்திரம் வழங்குவதை அனுமதிப்பதனாலும் சிறுபான்மை மீதான வன்முறைகள் தொடர்வதையும் இந்த ஆய்வு உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆய்வு நான்கு பிரிவுகளாக வழங்கப்படுகின்றது. சிறுபான்மை மதக் குழுக்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில் (ஜனவரி 2015 - ஓகஸ்ட் 2019) உள்ள சமூக - அரசியல் சூழலை முதலாவது பிரிவு ஆராய்கின்றது. கிறிஸ்தவ சமூகத்தினருக்கு எதிரான மத வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான போக்குகளின்

ஒப்பீட்டு அளவு மற்றும் தரத்தின் பகுப்பாய்வை இரண்டாவது பிரிவு முன்வைக்கின்றது. ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியுடன், 2010 - 2014 காலப்பகுதியில் இடம்பெற்ற கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத வன்முறைச் சம்பவங்களின் முக்கிய கண்டுபிடிப்புக்களை இந்தப் பிரிவு ஒப்பீடு செய்கின்றது.[8] அதன்பிரகாரம் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் (NCEASL) தொகுக்கப்பட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதிக்குரிய நான்கு ஆண்டுகள் மற்றும் எட்டு மாதங்களுக்கான தரவுகளை இந்த ஆய்வு ஆராய்கின்றது. *அமைதியான அடக்குமுறை: கிறிஸ்தவர்களின் சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகள் 1994 - 2014* என்ற வெரிட்டே ரிசேர்ச்சின் (VR) இதற்கு முன்னரான ஆய்வில் உருவாக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட வகைப்படுத்தல் முறையின் கீழ் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் வழங்கப்பட்ட தரவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வகைப்படுத்தப்பட்ட தரவுகள் பின்னர் அடிக்கடி நிகழும் தீங்கின் வகைகள், சம்பவங்களின் புவியியல் பரவல், முதன்மை இலக்கு குழுக்கள், முக்கிய குற்றவாளிகள் மற்றும் கிறிஸ்தவ சமூகம் மீதான மத வன்முறைச் சம்பவங்களில் அரசாங்கத்தின் பங்கு என்பவற்றை அடையாளம் காணப்பயன்படுகின்றது.

மூன்றாவது பிரிவானது முஸ்லிம் சமூகத்தினர் மீது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட மூன்று "மோசமான" வன்முறைச் சம்பவங்களை ஆராய்கின்றது. மேலும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் முன்னெடுக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்படும் "சிங்களமயமாக்கல்/பௌத்தமயமாக்கல்" தொடர்பிலும் ஆராயப்படுகின்றது. இலங்கையில் சிறுபான்மை மத குழுக்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் வன்முறைகள் மற்றும் மத சுதந்திரம் தொடர்பிலான முக்கிய கண்டுபிடிப்புக்களை இறுதிப் பிரிவு முன்வைக்கின்றது.

## ஆய்வின் அளவுருக்கள்

*அமைதியான அடக்குமுறை: கிறிஸ்தவர்களின் மத சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துதல் 1994 - 2014* என்ற இதனையொத்த ஆய்வைப் போன்றே, NCEASL சம்பவ அறிக்கையின் அடிப்படையில் இந்த ஆய்விலுள்ள சம்பவங்கள் "மதத்தினால் உந்தப்பட்டுள்ளது" எனவகைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சில சம்பவங்கள் மத ரீதியாக இடம்பெற்றுள்ளது என்பதை வி.ஆரினால் உறுதிப்படுத்த முடியாத போது அவை தவிர்க்கப்பட்டுள்ளன. இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் சம்பவ அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட சம்பவங்களின் விபரங்கள் முதன்மை ஆதாரங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர் அந்த தகவல்கள் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் அந்தந்த பகுதிகளிலுள்ள வலையமைப்பு மற்றும்/அல்லது சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் பிராந்திய அலுவலரை (காணப்பட்டால்) தொடர்புகொண்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுவிசேஷக ஐக்கியத்துவ தலைமை அலுவலகத்தில் இருந்து குறைந்தது இரண்டு உத்தியோகத்தர்கள் பிரதிவாதியை சந்தித்து வழங்கப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத்தன்மையை தனித்தனியாக ஆராய்ந்துள்ளனர். சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ள சம்பவ அறிக்கையில் உள்ள பட்டியல்கள் சில சமயங்களில் முழுமையானவையாக இருக்காது. எனினும், மூன்றாந்தரப்பு மூலங்கள் மூலமாக அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை (கிறிஸ்தவர்கள் மீதான வன்முறை தொடர்பான அறிக்கைகள் தொடர்பில்). அடிப்படை பிழை சரிபார்ப்பு மற்றும் தரவுகளை தூய்மைப்படுத்துவதைத் தவிர்த்து, தரவுகளை மூன்றாந்தரப்பின் ஊடாக வி.ஆர் உறுதிப்படுத்தவில்லை. எனினும், சம்பவங்களின் நகலை வி.ஆர் கண்டறிந்தால், நகல் பதிவு நீக்கப்பட்டது.

# சமூக - அரசியல் சூழ்நிலையின் ஆய்வு

## சிறுபான்மை எதிர்ப்பு உணர்வுகளின் மீள் எழுச்சி

கடந்த ஐந்து வருடங்களில், இந்த நாடு அரசாங்கத்தில் மாற்றத்தை சந்தித்துள்ளது, புதிய “சிங்கள - பௌத்த தேசிய” அரசியல் கட்சி உருவாகியுள்ளது,[9] அத்துடன் பயங்கரவாத தாக்குதலையும் சந்தித்துள்ளது. இந்தப் பின்னணியில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் சிறுபான்மை மதத்தவர்களை நடத்துவதிலுள்ள போக்கினை இந்த ஆய்வு தீவிரமாக ஆராய்வதுடன், மதிப்பிடுகின்றது.

போருக்குப் பின்னரான காலங்களில் சிங்கள - பௌத்த தேசியவாத எழுச்சி காணப்படுவதுடன், இது சிறுபான்மை இன - மத குழுக்களை ஓரங்கட்டுவதில் பங்களித்துள்ளது.[10] இந்த ஓரங்கட்டப்படுதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் நிர்வாகம் முக்கிய காரணமாக இருந்தது, போருக்கு பின்னரான அவரது அணுகுமுறை நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் அதேநேரம், சிங்கள - பௌத்த பேரினவாத சிந்தாந்தத்தை ஊக்கப்படுத்துவதாகும்.[11] இந்த சூழலில் சிறுபான்மையினருக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட கடும் பௌத்த தேசிய இயக்கமான பொதுபல சேனா உள்ளிட்ட இன - மத தேசியவாத இயக்கங்களின் எழுச்சியை இலங்கை கண்டது.

2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றமானது “இனவாதத்தில்” இருந்து “குடிமை தேசியவாதமாக” மாறும் என்ற எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியது.[12] சிறுபான்மையினருடன் மோதல் போக்கை கடைப்பிடிக்கும் பெரும்பான்மை இன - மத குழுக்களின் (சிங்கள - பௌத்தர்கள்) மூலம் அரசாங்கம் இனமயமாக்கப்படுகின்றது. இதற்கு மாறாக, குடிமை தேசியவாதமானது சுதந்திரம், சமத்துவம், தனிமனித உரிமைகள் மற்றும் அனைவரையும் உள்ளடக்குவது ஆகிய மதிப்புக்களை கடைப்பிடிக்கின்றது. ஒரு தேசிய கலாச்சாரத்தை மற்றவர்கள் மீது ஊக்குவிப்பதை விடுத்து பகிரப்பட்ட குடியுரிமையைச் சுற்றி ஒரு அரசியல் அடையாளத்தை முன்னெடுக்கும்.[13] அதன்பிரகாரம், அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்ட போது சிறுபான்மை மதத்தவர்கள் மீதான திட்டமிடப்பட்ட வன்முறைகளில் தற்காலிகமான வீழ்ச்சி ஏற்பட்டது.[14] எனினும், கடந்த கால வன்முறைகளின் குற்றவாளிகளை தண்டிக்கத் தவறியமை இன்றும் அந்தக் குற்றவாளிகள் செயற்படுவதற்கான சூழலை அமைத்துக் கொடுத்தது என இந்த ஆய்வு வாதிடுகின்றது. செயலற்ற தன்மை மற்றும் சலுகைகளினால் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அத்துடன் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் நாட்டின் சிறுபான்மையினர்களை இலக்கு வைத்து மத வன்முறைகளை முன்னெடுக்க வழிவகுத்தது. இவ்வாறான சம்பவங்கள் 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் உச்சத்தை தொட்டதுடன், முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிரான பாகுபாடு மற்றும் பழிவாங்கும் வன்முறைகளும் நிகழ்ந்தன. 2019

நொவம்பர் 18 ஆம் திகதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஸ ஏழாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டதுடன் இலங்கையின் அரசியல் சூழல் மாறியது. குறிப்பாக, இன – மத தேசியவாதிகளான பொதுபல சேனா மற்றும் சிங்கள ராவய போன்ற சிங்கள – பௌத்தக் குழுக்கள், ராஜபக்ஸவின் வெற்றியை முஸ்லிம் மற்றும் தமிழ் தீவிரவாதக் குழுக்களில் இருந்து சிங்கள இனத்தைப் பாதுகாக்கும் வெற்றியாகக் கருதினர். இந்தப் பின்னணியில், அவர்களுக்கான ‘தேவை’ இனி இல்லை என்பதனால் பொதுத் தேர்தலை அடுத்து தங்களது குழுக்களை கலைக்க விரும்புவதாக அறிவித்தனர்.[15] எனினும், சிங்க லே போன்ற பிற கடும் போக்கு தேசியவாத சிங்கள – பௌத்த குழுக்கள் வேறு பிரச்சினைகள் தொடர்பில், குறிப்பாக பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதத்தினை அவமதிக்கும் வகையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய தொலைபேசி பதிவு தொடர்பில் குரல் கொடுப்பதை ஊடக மற்றும் செய்தி அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.[16] எனவே, கடும் தேசிய சிங்கள - பௌத்த மற்றும் இஸ்லாமிய இயக்கங்களை அடக்கி சிறுபான்மை மதத்தவர்களை புதிய அரசாங்கம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இன - மத வன்முறைகள் அரசாங்கத்தின் நேரடி மற்றும்/அல்லது மறைமுக ஆதரவின்றிக்கூட நடைபெறும் என கிஹான் குணதிலக்க உள்ளிட்ட புத்திஜீவிகள் வாதிடுகின்றனர்.[17] எனவே, அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் சிறுபான்மையினர் மீதான வன்முறைகள் தொடரும். இலங்கையின் இன - மத வன்முறைகளின் வரலாற்றைப் பார்க்கும் போது நிலவும் சிறுபான்மையினருக்கு எதிரான மனப்பான்மை மற்றும் வன்முறைகளை புரிந்துகொள்ள முடியும். இலங்கையில் வன்முறைகள் பெரும்பாலும் பெரும்பான்மை சமூகத்திற்கும் சிறுபான்மை சமூகத்திற்கும் இடையிலேயே நிகழ்ந்துள்ளது - பெரும்பான்மை சிங்கள - பௌத்த சமூகம் மற்றும் இன - மத அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ள சிறுபான்மை சமூகம்.[18] இதன் பிரகாரம், பெரும்பான்மை சிங்கள - பௌத்த சமூகத்தின் உரிமை மனோபாவம் மற்றும் இருத்தலியலின் பாதுகாப்பின்மையே சிறுபான்மையினர் மீதான வன்முறைகளுக்கு முக்கிய காரணியாக உள்ளதென குணதிலக்க வாதிடுகின்றார்.[19]

இந்த நாட்டின் வரலாற்று உரிமை கோரலைக் கொண்டிருப்பதாக சிங்கள - பௌத்த சமூகத்தின் சில பிரிவினர் கொண்டுள்ள உள்ளார்ந்த நம்பிக்கையே இந்த உரிமை மனப்பாங்கை பெரும்பாலும் இயக்குகின்றது (அதாவது இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே சொந்தமானது). இந்த உரிமை கோரலுக்கான “வரலாற்று ஆதாரமாக” மகாவம்சம் (இலங்கையை பௌத்த அரசர்கள் ஆண்டதாக கூறும் புராண - வரலாற்று நூல்) முன்வைக்கப்படுகின்றது.[20] இதன் காரணமாக இந்த மனப்பாங்கு பெரும்பான்மையினரின் மனதில் “சொந்தமானவர் - விருந்தினர்” என்ற மனப்பாங்கை உருவாக்குகின்றது. சிங்கள - பௌத்தர்கள் தாங்கள் முதன்மை குடிமக்களாகவும் சிறுபான்மையினர் விருந்தினர்கள் என்ற மனோபாவத்தையும் கொண்டுள்ளனர்.[21] இந்த “சொந்தமானவர் - விருந்தினர்” மனநிலையில், விருந்தினர்கள் ஏற்கனவே உள்ள “அதிகார கட்டமைப்பிற்கு சவால் விடுக்கக்கூடாது” என கருதுகின்றனர்.[22]

இருத்தலியலிலுள்ள பாதுகாப்பற்ற தன்மையானது நாட்டில் சிங்கள - பௌத்த சமூகத்தின் மேலாதிக்க நிலைக்கு உணரப்பட்ட “இருத்தலியல் அச்சுறுத்தல்” தொடர்பானது. சிங்கள - பௌத்த சமூகமானது “சிறுபான்மை மனப்பாங்கை கொண்ட பெரும்பான்மை” என புத்திஜீவி ஸ்டான்லி ஜே.தம்பையா இந்த பாதுகாப்பற்ற தன்மையை விளக்குகின்றார்.[23] பாரிய உலகளாவிய சூழலில் சில சிங்கள - பௌத்தர்கள் தங்களை சிறுபான்மையினராகக் கருதுவதாக தம்பையா கூறுகின்றார். இலங்கையிலுள்ள தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உலகளாவிய சமூகத்தைக் கொண்டிருப்பதாக உணரப்படுவதால், சிங்கள - பௌத்தர்கள் இந்த நாட்டின் உண்மையான சிறுபான்மையினராக ஆக்கப்படுகின்றனர்.[24] அதன்

காரணமாக இலங்கையில் சிங்கள - பௌத்த மேலாதிக்க நிலையை குறைக்கக்கூடும் என உணரும் அச்சுறுத்தல்களில் இருந்து தங்களது இன - மத அடையாளத்தை காப்பாற்றுவதற்கு சிங்கள - பௌத்தர்கள் முற்படுகின்றனர்.[25]

இவ்வாறான இருத்தலியலுக்கான அச்சுறுத்தல்களின் உதாரணங்கள் அனைத்து இன - மத சிறுபான்மையிடமும் காணப்படுகின்றன. உதாரணமாக, முஸ்லிம் சனத்தொகையின் வளர்ச்சி தொடர்பான அச்சமும், முஸ்லிம் சமூகம் பொருளாதார ரீதியாக செழிப்பாக உள்ளதான கருத்தும் பெரும்பான்மை சிங்கள - பௌத்தர்களின் அடையாளம் மற்றும் பொருளாதாரத்திற்கான அச்சுறுத்தலாக அடையாளம் காணப்படுகின்றது. அதேவேளை, தமிழ் சுயாட்சியைக் கோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத நிகழ்ச்சிநிரல் சிங்கள - பௌத்த சமூகத்தின் பிராந்திய ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக அடையாளம் காணப்படுகின்றது. கிறிஸ்தவ மதமாற்றம் (அதாவது பிரச்சாரம் அல்லது மாற்றம்) சிங்கள - பௌத்தர்களின் எண்ணிக்கை மற்றும் கலாச்சார ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக பார்க்கப்படுகின்றது.[26]

மிக அண்மையில், போருக்குப் பின்னரான சூழலில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் - இந்து மதம் மேலாதிக்க சித்தாந்தமாக உருவெடுத்துள்ளது.[27] கிறிஸ்தவ மத மாற்றங்கள் உள்ளிட்ட பிற மதங்களின் பரப்புதலினால் தமிழ் - இந்துக்கள் எதிர்கொள்ளும் இருத்தலியலுக்கான அச்சத்தினால் இந்த சித்தாந்தம் முதன்மையாக இயக்கப்படுகின்றது.[28]


இந்த அச்சுறுத்தல்கள் சிறுபான்மை "விருந்தினர்கள்" ஏற்கனவே காணப்படும் அதிகார கட்டமைப்பிற்கு சவால் விடுப்பதாக விளங்கிக்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக, இந்த ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட பிராந்திய மாவட்ட – மட்ட பகுப்பாய்வில் இந்த பெரும்பான்மை – சிறுபான்மை இயக்கிகள் வேறுபடுகின்றன. உதாரணமாக, மட்டக்களப்பின் இன மத அமைப்பில் தமிழ் இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் போது, பொலனறுவையின் இன – மத அமைப்பில் சிங்கள – பௌத்தர்கள் பெரும்பான்மையானவர்களாக இருக்கின்றனர். இது பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கிடையே வன்முறைகளை அதிகரிக்கின்றன. எனவே, இந்த ஆய்வில் ஆவணப்படுத்தப்பட்டு, ஆராயப்படும் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் மீதான இன - மத வன்முறைச் சம்பவங்கள், சிங்கள - பௌத்த ஆதிக்கத்தை குறைக்கச்செய்யும் இருத்தலியலுக்கான அச்சுறுத்தலின் வெளிப்பாடாகக் கருதமுடியும்.

# கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத வன்முறைகளின் போக்கின் பகுப்பாய்வு

இந்த ஆய்வு ஜனவரி 2015 முதல் ஓகஸ்ட் 2019 வரையான காலப்பகுதியை கவனத்தில் கொள்கின்றது. இந்த ஆய்வினை எழுதும் வரையில் 2019 ஆம் ஆண்டின் இறுதி நான்கு மாதங்களுக்கான சம்பவ அறிக்கை கிடைக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். எனவே, இந்த ஆய்வானது ஓகஸ்ட் 2019 ஆம் ஆண்டு வரையான தரவுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மனதில் கொள்ளவும். நான்கு ஆண்டுகள் மற்றும் 8 மாதங்களில் இலங்கையின் கிறிஸ்தவ சமூகத்தை இலக்காகக் கொண்டு சுமார் 397 மத வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலம் மாத்திரம் வெறுமனே மதிப்பாய்வு செய்யப்படவில்லை. மாறாக, இதற்கு முன்னரான ஆய்வில் 21 வருடங்களாக (1994 - 2014) ஆய்வு செய்யப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளின் தொடர்ச்சியான போக்கினைக் கருத்திற் கொண்டு இது ஆராயப்படுகின்றது. இதற்கு முன்னரான ஆய்வு - *அமைதியான அடக்குமுறை: கிறிஸ்தவர்களின் மத சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகள் 1994 - 2014* - இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் 20 வருடங்களுக்கும் மேலாக சேகரிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் மீதான மதரீதியான பாகுபாடு மற்றும் வன்முறைகள் தொடர்பில் ஆய்வு செய்தது.

ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில் பதிவான சம்பவங்கள் தீங்கின் வகை, முதன்மை இலக்குகள், முக்கிய குற்றவாளிகள் மற்றும் புவியியல் பரவல் என வகைப்படுத்தப்படுகின்றது. இந்த வகைப்படுத்தல் கிறிஸ்தவர்களினால் எதிர்கொள்ளப்பட்ட மத வன்முறைச் சம்பவங்களின் பண்புகளை ஆராய்வதற்கு உதவும்.

படம் 1: 2010 - 2019 (ஓகஸ்ட்) காலப்பகுதியில் கிறிஸ்தவர்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் மொத்த எண்ணிக்கை



இந்த ஆய்வில் அடுத்தடுத்த பிரிவுகள் ஜனவரி 2015 முதல் ஓகஸ்ட் 2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மத வன்முறைச் சம்பவங்களுக்கு இடையேயுள்ள தொடர்பையும், அதற்கு முன்னரான காலப்பகுதியுடனான - அதாவது 2010க்கு பின்னர் (2010 - 2014) மற்றும் 2015க்கு பின்னர் (2015 - 2019) ஒப்பீட்டையும் மேற்கொள்கின்றது.


இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் சம்பவங்கள் அறிக்கையிடல் மற்றும் அறிக்கையிடல் வீதம் (அதாவது ஆய்வு செய்யப்படும் காலப்பகுதி முழுவதும் NCEASL நிலையாக செயற்பட்டுள்ளது) என்ற அனுமானத்தின் அடிப்படையில் பின்வரும் அவதானிப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

## காலத்தின் அடிப்படையில் சம்பவங்கள்

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியை அவதானிக்கும் போது, 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைகளுடன் ஒப்பிடுகையில் இரண்டு நேர்மறையான போக்குகளை வெளிப்படுத்துகின்றது. இந்த இரண்டு போக்குகளும் அளவு மற்றும் பண்புசார் வடிவங்கள் - அதாவது முறையே ஒரு சம்பவத்திற்கும் மற்றொரு சம்பவத்திற்கும் இடையிலான இடைவேளை மற்றும் வன்முறையின் வகையை வெளிப்படுத்துகின்றன.

(1) ஒரு சம்பவத்திற்கும் மற்றொரு சம்பவத்திற்கும் இடையிலான இடைவேளை - 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் மாதம் ஒன்றுக்கு (2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 5 சம்பவங்களுடன் ஒப்பிடும் போது 7 சம்பவங்கள்) சராசரியாக இடம்பெறும் சம்பவங்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், 2010க்கு பின்னரான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சம்பவங்களுக்கு இடையிலான காலப்பகுதியில் உடனடி வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த ஆய்வில் கால இடைவேளை என்பது

படம் 2: *2010 - 2019 (ஓகஸ்ட்) கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள்*



குறித்த காலப்பகுதியில் எந்த விகிதத்தில் சம்பவங்கள் நடக்கின்றன என்பதைக் குறிக்கின்றது. மத வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற விகிதத்தை பார்க்கும் போது, 2010 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியுடன், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியை ஒப்பிடுகையில் திடீர் அதிகரிப்பு காணப்பட்டது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையிலான சம்பவங்கள் பதிவாகியுள்ளன (முறையே 93 மற்றும் 89). குறிப்பாக, 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் வன்முறைகள் அதிகரித்த விகிதம் தொடர்ந்திருந்தால், 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் 2013 ஆம் ஆண்டில் பதிவான சம்பவங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்திருக்கும். எனவே, 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களின் விகிதம் வன்முறையின் அடிப்படை நிலைக்குத் திரும்பாத போதும் (25 சம்பவங்கள்),[ஆ] மத வன்முறைச் சம்பவங்கள் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியின் விகிதத்தைப் போன்று அதிகரிக்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், 2015 க்குப் பின்னரான காலப்பகுதியில் எந்தவொரு ஆண்டிலும் இடம்பெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டை விடக் குறைவாகும்.

(2) வன்முறையின் வகை - 2015 க்குப் பின்னர் பதிவான சம்பவங்களின் விகிதத்தில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்ட போதும், ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில் உடல் ரீதியான வன்முறைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சரிவே இந்த வீழ்ச்சிக்கு காரணம் (படம் 2 இல் காட்டப்பட்டுள்ளது போன்று). இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, உடல் ரீதியான வன்முறை என்பது நபர்களுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை மற்றும் சொத்துக்களை சேதப்படுத்துதல் அல்லது அழித்தலை உள்ளடக்கியது. அதேவேளை, உடல் ரீதியற்ற வன்முறையில் வெறுக்கத்தக்க பேச்சு, அச்சுறுத்தல், மிரட்டல் அல்லது வற்புறுத்தல் மற்றும் பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை என்பன அடங்கும். குறிப்பாக, 2016 ஆம் ஆண்டில் உடல் ரீதியான வன்முறைச் சம்பவங்கள் 11 நிகழ்ந்துள்ளதுடன், இது எப்பொழுதும் இல்லாத அளவு மிகக்குறைவாகும். கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் சம்பவங்களின் மொத்த எண்ணிக்கையில் உடல் ரீதியான வன்முறைச் சம்பவங்கள் 10 வருடங்களுக்கும் மேலாக ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றது. கிறிஸ்தவர்களினால் எதிர்கொள்ளப்படும் உடல் ரீதியான வன்முறைகளின் போக்கிலுள்ள ஒழுங்கின்மையை ஏப்ரல் 2019 பதிவுசெய்துள்ளது. இந்த ஒழுங்கின்மை இணைப்பு 1 இல் விபரமாகத் தரப்பட்டுள்ளது.

## தீங்கின் வகை

10 வருட காலப்பகுதியில் உடல் ரீதியற்ற வன்முறைச் சம்பவங்களின் உச்ச மற்றும் நீடித்த நிலையை படம் 2 எடுத்துக்காட்டுகின்றது. இந்த சூழலில், ஆய்வுக்குட்படுத்தப்படும் காலப்பகுதியில் கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கிய உடல் ரீதியற்ற சம்பவங்களில் அதிக விகிதமானது (87 சதவீதம்) பாரபட்சமான செயல் அல்லது நடைமுறையை உள்ளடக்கியது (அதாவது படம் 3 இல் காட்டப்பட்டுள்ளது போன்று 276). இந்த வகையான தீங்கில் (பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை) முக்கியமாக வழிபாட்டுத்தலங்கள் (192 சம்பவங்களில்) அல்லது மதபோதகர்கள் (96 சம்பவங்களில்) இலக்குவைக்கப்படுகின்றது (படம் நான்கைப் பார்க்கவும்). எனவே, இந்த வகையான தீங்குகளின் கீழ் ஆவணப்படுத்தப்பட்ட சம்பவங்கள் பொதுவாக வழிபாட்டுத்தலங்களின் சட்டபூர்வமான தன்மை குறித்து மதபோதகரிடம் கேள்வி எழுப்புதல் அல்லது மத நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரப்படுவதை உள்ளடக்கியது. பொது மயானங்களில் புதைப்பதற்கு அனுமதி மறுக்கப்படுவது

(ஆ) இந்த ஆய்வில் வன்முறையின் அடிப்படை நிலை 10 வருட காலத்தில் (2010 - 2019) பதிவான மத வன்முறைச் சம்பவங்களின் குறைந்த எண்ணிக்கையாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அல்லது பாடசாலைகளில் கிறிஸ்தவ மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது என்பன கிறிஸ்தவர்களுக்கு எதிரான பிற பாரபட்சமான நடவடிக்கைகள் ஆகும்.

இவ்வாறான சம்பவங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவற்றில் முக்கிய குற்றவாளிகளாக அரச அதிகாரிகளே இருப்பது இந்த வகையான தீங்கின் பொதுவான அம்சமாகும். இதன் விளைவு, கிறிஸ்தவர்களுக்கு எதிரான பாகுபாட்டில் அடிக்கடி அரசாங்கம் தலையிடுவது இவ்வாறான தலையீட்டின் முறையான இயல்பினைக் குறிக்கின்றது. மத பாகுபாட்டில் தெளிவாகத் தெரியும் அரசாங்கத்தின் முக்கிய பங்கானது இந்த ஆய்வின் அடுத்தடுத்த பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, இப்பகுதியிலுள்ள உள்ளூர்வாசிகள் (அடையாளம் காணக்கூடிய நபர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்) – குற்றவாளிகளின் இரண்டாவது பிரபலமான வகை – அச்சுறுத்தல், மிரட்டல் அல்லது வற்புறுத்தல் தொடர்பான சம்பவங்களில் 60 சதவீதத்திற்கும் மேல் குற்றவாளிகளாக உள்ளனர். உள்ளூர்வாசிகளுடன் தொடர்புடைய சம்பவங்களில் தேவாலயங்களை சுற்றி தனிநபர்கள் ஒன்றுகூடுதல் மற்றும் சமய வழிபாடுகளை நிறுத்துமாறு மதபோதகர்களை அச்சுறுத்துதல்/நிர்ப்பந்தித்தல் என்பன அடங்கும். மேலும், இவ்வாறான சம்பவங்களில் அதிகமானவற்றில், உள்ளூர் மக்களுடன் உள்ளூர் மதத்தலைவர் (அதாவது புத்த பிக்கு அல்லது இந்து பூசாரி) அல்லது உள்ளூரில் அரசாங்கத்துடன் தொடர்புடையவர் (அதாவது பிரதேச செயலாளர்) வருகை தருவார். கிறிஸ்தவ சமூகம் மீதான இவ்வாறான உடல் ரீதியற்ற தன்மையைக் கொண்ட வன்முறைகள் ‘உள்ளூர்மயப்படுத்தப்பட்டுள்ளன’, அதாவது இந்த சம்பவங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன, தேசிய அளவில் இது நிகழாது. சிறுபான்மை உரிமைகள் குழு (MRG) அவதானித்ததன் பிரகாரம், ‘இதன் பின்னணியில் உள்ள உணர்வு என்னவென்றால் கிறிஸ்தவர்கள் ‘வெளியிலிருந்து வந்தவர்கள்’ அவர்கள் ‘உள்ளூர்’ என்பதற்கான பாரம்பரிய விளக்கத்திற்கு ஒத்துப்போகாதவர்கள், எனவே கிராமத்திற்குள் அவர்கள் வரவேற்கப்படுவதில்லை’.[29] எனவே, குறிப்பிட்ட பகுதிக்கென ஏற்கனவே உள்ள அதிகாரத்திற்கு அச்சுறுத்தலாக கருதப்படுவதே இந்த வன்முறையைத் தூண்டுகின்றது.

இதற்கு மாறாக, 2010க்கு பின்னரான காலப்பகுதியில் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் அல்லது வற்புறுத்தல்கள் மீண்டும் மீண்டும் நிகழும் தீங்குகளாக பதிவாகியுள்ளன. அதேநேரத்தில், 2010 க்குப் பின்னரான காலப்பகுதியுடன் அதற்கு முன்னரான ஐந்தாண்டு காலத்தை (அதாவது 2005 - 2009) ஒப்பிடுகையில், பாரபட்சம் காட்டும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளின் பண்பானது முறைப்படுத்தப்பட்ட, உடல் ரீதியற்ற மற்றும் கட்டமைக்கப்பட்டவை என்பதை முந்தைய ஐந்தாண்டு காலம் மற்றும் தற்போது ஆய்வுக்குட்படுத்தப்படும் காலப்பகுதியில் கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கும் தீங்கின் வகை தொடர்பான தரவுகள் ஒட்டுமொத்தமாக சுட்டிக்காட்டுகின்றன.[இ]

(இ) (தனிநபர்கள்) தங்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாமல் சமூகக் கட்டமைப்புக்கள் அல்லது சமூக நிறுவனங்கள் தடை செய்யும், தனிநபர்கள் மீதான தீங்கு “கட்டமைக்கப்பட்ட வன்முறை” என ஜோஹன் கல்துங் வரையறுக்கின்றார். இந்த சூழலில் ”கட்டமைக்கப்பட்ட வன்முறை” இயற்கைக்கு விரோதமாகும்.


இரண்டு காலகட்டங்களின் மதிப்பீடும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறையின் பரந்த தன்மை மாறாமல் உள்ளது என்பதை வெளிக்காட்டுகின்றது. எனினும், 2015 க்குப் பின்னரான காலகட்டத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் தீங்கின் வகையில் மாற்றம் உள்ளது, அதாவது அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் அல்லது வற்புறுத்தல்களில் இருந்து பாரபட்சமான செயல் அல்லது நடைமுறைக்கு மாறியுள்ளது.

படம் 3: *2015 - 2019 (ஓகஸ்ட்) கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைச் சம்பவங்களில் இடம்பெறும் தீங்கின் வகைகள்*





*ஒரு சம்பவம் ஒன்றுக்கு மேற்பட்ட தீங்கின் வகைகளைக் கொண்டிருக்கலாம். எனவே, ஒவ்வொரு தீங்கின் வகைக்கும் கணக்கிடப்படும் மொத்த எண்ணிக்கை சம்பவங்களின் மொத்த எண்ணிக்கையை விட அதிகரிக்கலாம்.

படம் 4: *2015 - 2019 (ஓகஸ்ட்) கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைச் சம்பவங்களின் முதன்மை இலக்குகள்*




*ஒரு சம்பவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மை இலக்குகள் காணப்படலாம்.

படம் 5: *2015 - 2019 (ஓகஸ்ட்) கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைச் சம்பவங்களின் முக்கிய குற்றவாளிகள்*



# அரசாங்கத்தின் பங்கு

மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் அஹமட் ஷாஹீத் 2019 ஓகஸ்ட் இலங்கைக்கு வருகை தந்த போது, மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்திற்கு இரண்டு கடமைப்பாடுகள் உள்ளதாக அவரது ஆரம்பகட்ட கண்டுபிடிப்புக்களில் அடையாளம் கண்டிருந்தார்.[30] இந்தக் கடமைப்பாடுகள் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை செயற்படுத்துவதற்கான தனிநபர்களின் உரிமைக்கு மதிப்பளிப்பதற்கான அரசாங்கத்தின் எதிர்மறையான கடமைப்பாடு மற்றும் மூன்றாம் தரப்பினர்/அரசாங்கம் அல்லாதோரினால் இந்த உரிமைகள் மீறப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கான நேர்மறையான கடமைப்பாட்டையும் அரசாங்கம் கொண்டுள்ளதாக அவர் அடையாளம் கண்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் கிறிஸ்தவ சமூகங்கள் எதிர்கொள்ளும் மத வன்முறை செயல்கள் தொடர்பில் இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் அரசின் பங்கை இந்தப் பிரிவு விமர்சன ரீதியாக ஆராய்கின்றது. எனவே, அரசின் பங்கானது பின்வரும் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது: கிறிஸ்தவ சமூகத்தின் மீதான (1) எதிர்மறை, மற்றும் (2) நேர்மறை கடமைப்பாடுகள். இந்த ஆய்வில், அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட மத வன்முறைச் சம்பவங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாகாண சபை அதிகாரிகள், நகரசபைகள், பிரதேச சபைகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டவை உள்ளூர் மட்டத்தில் பங்காற்றியிருக்கின்றார்கள்.

## (1) அரசாங்கத்தின் எதிர்மறை கடமைப்பாடு

மேலே விளக்கப்பட்டுள்ளது போன்று, தனிநபர்கள் அவர்களுடைய மதம் அல்லது நம்பிக்கையை முன்னெடுப்பதற்கான சுதந்திரத்திற்கான உரிமைக்கு மதிப்பளிப்பது அரசாங்கத்தின் எதிர்மறை கடமைப்பாடாக உள்ளது. கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத வன்முறைச் சம்பவங்களில் குறிப்பிடத்தக்க பங்கில் (40 சதவீதத்திற்கும் அதிகமானவை) முக்கிய குற்றவாளிகள்/தவறுசெய்யும் கட்சியாக அரச நிறுவனம் அல்லது அரசாங்க ஊழியர் இருப்பதை படம் 5 விளக்குகின்றது. அதாவது, இலங்கையில் கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைகளில் 40 சதவீதத்திற்கும் அதிகமான சம்பவங்களில் மத அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை அரசாங்கம் நேரடியாகத் தடுக்கின்றது. இதன் விளைவாக, கிறிஸ்தவர்கள் தங்களது மத அல்லது நம்பிக்கை சுதந்திரத்தை முன்னெடுப்பதற்கான உரிமையில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடுவதன் காரணமாக கிறிஸ்தவ சமூகம் மீதான எதிர்மறை கடமைப்பாட்டை பூர்த்தி செய்ய அரசாங்கம் தவறியுள்ளது.

பல சம்பவங்களில், உடல் ரீதியற்ற வன்முறைச் சம்பவங்களில் முக்கிய குற்றவாளி/தவறுசெய்யும் கட்சியாக அரசாங்கம் இருந்துள்ளது. இந்த

உடல் ரீதியற்ற சம்பவங்களில், அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டிய முக்கிய தீங்காக பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை காணப்படுகின்றது (276 சம்பவங்களில் 158 அல்லது 57 சதவீதம்).


கிறிஸ்தவர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் தலைமையிலான பாரபட்சமான நடவடிக்கையில் புதிய வழிபாட்டுத்தலங்களை நிர்மாணிப்பதற்கான 2008 சுற்றறிக்கை பயன்படுத்தப்படுத்தப்படுகின்றது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுக்கள் அளிக்கப்பட்டதன் பின்னர் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களை பதிவு செய்யத் தேவையில்லை என புத்த சாசன அமைச்சு மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான திணைக்களம் உறுதிப்படுத்தியது.[31] எனினும், வழிபாட்டுத்தலம் சட்டவிரோதமானது/அங்கீகரிக்கப்படாதது அல்லது வழிபாட்டுத் தலத்தின் பதிவு அல்லது சட்டபூர்வம் தொடர்பில் விளக்கம் பெறுதல் என்பவற்றை உறுதிசெய்வதற்கு தொடர்ந்து அரச தரப்பு சுற்றறிக்கையைப் பயன்படுத்தின. இவ்வாறான வழிபாட்டுத்தலங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் தலைமையிலான பாரபட்சம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் உச்சத்தைத் தொட்டது (பதிவு செய்யத் தவறியமைக்காக 39 தேவாலயங்கள் மூடப்பட்டன). ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் சட்டவிரோதமானவை/அங்கீகரிக்கப்படாதவை மற்றும் தேவையான அனுமதி பெறாத காரணத்தினால் மத நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்ட அல்லது முற்றாக நிறுத்தப்பட்ட 35 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வழிபாட்டுத் தலம் ஒன்றை “சட்டவிரோதம் - அங்கீகரிக்கப்படாதது” என்பதை தீர்மானிப்பதற்கு சுற்றறிக்கையில் தெளிவான குறிப்பினைக் கொடுக்கவில்லை. மேலும், சுற்றறிக்கை “புதிய வழிபாட்டுத்தலங்களுக்கு” மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும், ஏற்கனவே உள்ள வழிபாட்டுத் தலங்களை சட்டவிரோதம்/ அங்கீகரிக்கப்படாதது என சுற்றறிக்கையை அமுல்படுத்திய பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் அறிக்கையில் பதிவாகியுள்ளது. சுற்றறிக்கையைப் பயன்படுத்தி அரச அதிகாரிகள் மதபோதகர்களை வற்புறுத்தி தேவையான பதிவுகள் பெறப்படும் வரையில் மத நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக கடிதத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்ட நடவடிக்கைகளும் உள்ளன. 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுற்றறிக்கையைப் பயன்படுத்தி வழிபாட்டுத் தலத்தை சட்டவிரோதம்/ அங்கீகரிக்கப்படாதது என முடிவு செய்யும் போக்கில் வீழ்ச்சி காணப்படுவதை படம் 6 எடுத்துக்காட்டுகின்றது. எனினும், 2015 ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் உள்ளூர் மட்டத்தில் அரச அதிகாரிகள் மத ரீதியான பாரபட்சங்களில் ஈடுபட்டுவந்ததை சுற்றறிக்கை கட்டாயமாக அமல்படுத்தப்பட்டது வெளிப்படுத்துகின்றது.

உடல் ரீதியான வன்முறைச் சம்பவங்களில் அரசாங்கம் ஈடுபடுவது மிகக் குறைவாகும். எனினும், 2015 ஆம் ஆண்டில், மத நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, கிராமத்தை விட்டு வெளியேற மறுத்த மதபோதகர் ஒருவரை மாகாண சபையின் தலைவர் தாக்கிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

முழுமையாக ஆராயப்பட்ட தரவுகள் தவறுசெய்யும் கட்சியாகவே அரசாங்கத்தின் பங்கினை வலுவாக நிரூபிக்கின்றது. மேலும், அரசாங்கத்தின் தலைமையிலான வன்முறைகள் பரந்த கட்டமைப்பு, முறைப்படுத்தப்பட்ட மற்றும் உள்ளூர்மயமாக்கப்பட்டதாக உள்ளது என அறிவுறுத்துகின்றது.

படம் 6: ஒவ்வொரு ஆண்டிலும் வழிபாட்டுத் தலங்கள் சட்டவிரோதம்/அங்கீகரிக்கப்படாதது எனக் கருதப்பட்டவற்றின் எண்ணிக்கை




## (2) அரசாங்கத்தின் நேர்மறை கடமைப்பாடு


இந்தப் பிரிவு கிறிஸ்தவ சமூகம் மீதான அரசாங்கத்தின் (அதாவது காவற்துறை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள்) நேர்மறை கடமைப்பாட்டை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மூன்றாம் தரப்பு/அரசு சாராதவர்களின் மீறலுக்கு எதிராக கிறிஸ்தவர்களின் உரிமையை பாதுகாப்பது மற்றும் அவர்களுடைய உரிமையை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை எளிதாக்குவதும் இந்தக் கடமையாகும்.(*) குறிப்பாக, அரசு சாராதவர்கள்/மூன்றாந்தரப்பினர் (அதாவது குறித்த பகுதியிலுள்ள உள்ளூர்வாசிகள், புத்த பிக்குகள் முதலானோர்) குற்றவாளிகளாக இருப்பது, அரசாங்கம் வன்முறையைத் துண்டுவதில்லை ஆனால் அதற்கு உடந்தையாக பங்கு வகிக்கின்றது என்பதைக் குறிக்கின்றது. பௌத்த மதகுரு அல்லாதவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் பௌத்த மதகுரு தலைமையிலான அல்லது சம்பந்தப்பட்ட மத வன்முறைச் சம்பவங்களில் காவற்துறையினரின் நிலைப்பாட்டை மாத்திரம் இந்தப் பிரிவு ஆராய்கின்றது. அரசின் நேர்மறைக் கடமைப்பாட்டை நிறைவேற்றுவதை மதிப்பிடுவதில், பௌத்த பிக்குகள் முன்னெடுத்த மத வன்முறை சம்பவங்களில் காவற்துறையினரின் நிலைப்பாட்டை இந்த ஆய்வு பின்வருமாறு வகைப்படுத்துகின்றது:

- ☐ எதிர்மறையான செயற்பாடு - வன்முறைச் சம்பவத்தின் போது அவர்கள் (காவற்துறை) உடனிருந்தால் வன்முறைக்கு ஆதரவாக நேரடியாக/மறைமுகமாக சம்பந்தப்படுதல்.

(*) இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, அரச நிறுவனம் அல்லது பொது ஊழியர் தவிர்த்த அனைத்து வகையான முக்கிய குற்றவாளிகளும் மூன்றாந்தரப்பு/அரசு சாராதவர்கள் என வரையறுக்கப்படுகின்றது.

- எதிர்மறையாக செயலற்றிருத்தல் - வன்முறைச் சம்பவத்தின் போது அவர்கள் உடனிருந்தால் முதன்மை இலக்கை பாதுகாப்பதில் தலையிடாமல் மதத் துன்புறுத்தலை தொடர அனுமதியளித்தல்/ வசதிப்படுத்துதல். இந்த வகைப்படுத்தலில் சம்பவத்திற்குப் பின்னர் பொருத்தமான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை தொடர மறுத்தல் என்பனவும் அடங்கும்.
- நேர்மறையான செயற்பாடு - மத வன்முறைச் சம்பவத்தில் அவர்கள் உடனிருந்தால் முதன்மை இலக்கின் பாதுகாப்பிற்காக தலையிடுவது.
- நேர்மறையாக செயலற்றிருத்தல்- வன்முறைச் சம்பவத்தின் போது அவர்கள் இல்லாவிட்டாலும், அதற்குப் பின்னர் பொருத்தமான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை தொடருதல்.

படம் 7: முக்கிய குற்றவாளிகளாக பௌத்த பிக்குகள் காணப்பட்ட போது காவற்துறையினரின் நிலைப்பாடு




*பௌத்த பிக்கு முக்கிய குற்றவாளியாக இருக்கும் 38 சம்பவங்களில் நிலைப்பாடு காணப்படவில்லை/தெரியவில்லை

புத்த பிக்குகள் முக்கிய குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட மொத்தம் 119 சம்பவங்களில் (படம் 7 ஐ பார்க்கவும்), 50 சம்பவங்களில் காவற்துறை உத்தியோகத்தர்கள் எதிர்மறையாக செயற்பட்டும், எதிர்மறையாக செயலற்றும் இருந்துள்ளனர் (முறையே 40 மற்றும் 10 சம்பவங்கள். படம் 7 ஐ பார்க்கவும்). இவ்வாறான எதிர்மறையான நிலைப்பாடானது கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத துன்புறுத்தலில் பௌத்த பிக்கு தொடர்புபட்டிருக்கும் போது காவற்துறை சம்பவ இடத்தில் இருப்பதுடன், நேரடியாக/மறைமுகமாக ஆதரவு வழங்கியுள்ளதுடன் அல்லது துன்புறுத்துவதற்கு வசதி செய்துகொடுத்துள்ளதை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக, கிறிஸ்தவர்கள் மீதான மத துன்புறுத்தலுக்கு உதவிசெய்யும் அவர்களுடைய தீர்மானத்தினால், அவர்கள் நேரடியாக துன்புறுத்தும் கட்சியாக இல்லாதபோதும், கிறிஸ்தவர்கள் மீது மேலதிக பாரபட்சம்/ வன்முறைக்கு காவற்துறை அனுமதியளிக்கின்றது.


இதற்கு மாறாக, முக்கிய குற்றவாளியாக பௌத்த பிக்கு அடையாளம் காணப்பட்ட 31 சம்பவங்களில் காவற்துறையினர் நேர்மறையான செயற்பாடு மற்றும் நேர்மறையான செயலற்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர் (முறையே 13 மற்றும் 8 சம்பவங்கள், படம் 7 ஐப் பார்க்கவும்). இதேவேளை, முக்கிய குற்றவாளியாக பௌத்த பிக்கு இல்லாத சம்பவங்களில் காவற்துறையினர் நேர்மறையான செயற்பாடு மற்றும் நேர்மறையாக செயலற்றிருக்கும் 63 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குற்றவாளி பௌத்த பிக்குவாக இருந்தால் முதன்மை இலக்கினை நேர்மறையாக தலையிட்டு காவற்துறையினர் உதவுவதில்லை என்பதை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சட்ட அமுலாக்க அமைப்புக்கள் ஒப்பீட்டளவில் எதிர்மறையான நடவடிக்கையில் அதிக சதவீதமும், நேர்மறையான நடவடிக்கையில் குறைந்த சதவீதமும் தலையிடுவது இலங்கையில் பௌத்த மதகுருமாருக்கு வழங்கப்பட்டுள்ள விதிவிலக்கான நிலைப்பாடு மற்றும் சலுகையைக் குறிக்கின்றது. இத்தகைய “பௌத்த துறவற விதிவிலக்கு” எவ்வாறு சாதாரண சட்டங்கள் மற்றும் தடைகள் மதகுருமாருக்கு சாதகமாக மாற்றப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது.[32] உதாரணமாக சில சம்பவங்களில் நிலைமையைக் கட்டுப்படுத்த காவற்துறையினர் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. மாறாக, அவர்களின் முன்னிலையின் கிறிஸ்தவ மதபோதகர்களை பௌத்த பிக்குகள் வெளிப்படையாக அச்சுறுத்தியுள்ளனர். பௌத்த மதகுருக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த விதிவிலக்கு மற்றும் சலுகையானது, பௌத்த பிக்குகள் உட்பட மூன்றாந்தரப்பு/அரசு சாராதவர்களினால் சிறுபான்மையினரின் மத உரிமைகள் மீறப்படும் போது அவர்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் நேர்மறையான கடமைப்பாட்டை மீறுவதாக அமைகின்றது. மேலும், பௌத்த பிக்குகளினால் அனுபவிக்கப்படும் இந்த விதிவிலக்கு அரச நிறுவனங்களில் புரையோடிப் போயுள்ள சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதத்தை பிரதிபலிக்கின்றது. இந்த சூழலில், அரச கட்டமைப்பில் காணப்படும் இவ்வாறான சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதம் “அரச கட்டமைப்பை அழியச் செய்துள்ளதாக”[33] குணதிலக்க போன்ற புத்திஜீவிகள் வாதிடுகின்றனர். இது சிறுபான்மை குழுக்களுக்கு தீங்கு விளைவிக்கும் பெரும்பான்மைவாதிகளை திருப்திப்படுத்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களை துண்டுகின்றது. நிறுவன சிதைவு தொடர்பான இந்த வாதம் “முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களை இலக்குவைத்து இடம்பெறும் இன - மத வன்முறைகளை ஆராய்தல்” என்ற தலைப்பிடப்பட்ட பிரிவில் விபரமாக ஆராயப்பட்டுள்ளது.

# மாவட்ட ரீதியான சம்பவங்களின் புவியியல் பரவல்

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களில் 22 இல் கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன (படம் 8 ஐ பார்க்கவும்). 2015 முதல் 2019 வரையில் அதிக எண்ணிக்கையிலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டமாக மட்டக்களப்பு (59) உள்ளது, அதனை அடுத்து பொலனறுவை (45) (இந்த மாவட்டங்களின் குறிப்பிடத்தக்க பண்புகள் குறித்து இணைப்பு இரண்டில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது). இந்த ஆய்வின் நோக்கங்களான குறிப்பிட்ட காலகட்டங்களுக்கு இடையேயான தொடர்புகள் மற்றும் காலப்பகுதிகளுக்கு இடையிலான ஒப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் பிரிவு இந்த இரண்டின் அடிப்படையில் சம்பவங்களின் புவியியல் பரவல் தொடர்பான தரவுகளை ஆராய்கின்றது. முதலாவதாக, மாவட்ட ரீதியாக வன்முறைகளின் எண்ணிக்கையில் அதிக மற்றும் குறைந்த சதவீத மாற்றங்களைக் கொண்ட 5 மாவட்டங்களை இந்தக் காலப்பகுதியில் (2010க்குப் பின்னர் மற்றும் 2015க்குப் பின்னர்) அடையாளம் காண்பது பயனுள்ளதாகும். இரண்டாவதாக, குறித்த காலப்பகுதியில் மாவட்டம் ஒன்றுக்கு, 100,000 கிறிஸ்தவர்களுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் வருடாந்த வீதத்திலுள்ள மாற்றத்தை கண்டறிந்து அதனை ஆராய்வது பயனுள்ளதாகும்.


படம் 8: *2010 - 2014 மற்றும் 2010 - 2019 (ஓகஸ்ட்) இடைப்பட்ட காலத்தில் மாவட்ட ரீதியாக சம்பவங்களின் எண்ணிக்கை*



## (1) மாவட்டம் ஒன்றுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் சதவீத மாற்றம்

2010க்குப் பின்னர் மற்றும் 2015க்குப் பின்னர் ஆவணப்படுத்தப்பட்ட சம்பவங்களில் அதிக சதவீத அதிகரிப்பை பதிவுசெய்த முதல் 5 மாவட்டங்களை படம் 9 சித்தரிக்கின்றது. முதல் 5 மாவட்டங்களில் நான்கில் 100 சதவீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பு பதிவாகியுள்ளது. குறிப்பாக, கிறிஸ்தவர்களின் சனத்தொகை குறைவாக (1.1 சதவீதம்) உள்ள போதும் பொலனறுவையில் சம்பவங்களில் அதிக சதவீத அதிகரிப்பு (400%) பதிவாகியுள்ளது. அத்துடன் புத்தளத்தில் கிறிஸ்தவ சனத்தொகை அதிக பங்கைக் கொண்டிருந்தாலும் (33 சதவீதம்) குறைவான அதிகரிப்பு பதிவாகியுள்ளது (43 சதவீதத்தினால்). மேலும், கிறிஸ்தவர்கள் மீதான மத வன்முறைச் சம்பவங்களில் (5 இல் 3) அதிக சதவீத அதிகரிப்பைக் கொண்ட முதல் 5 மாவட்டங்களில் பெரும்பான்மையானவற்றில், பொலனறுவை மற்றும் கேகாலையைத் தவிர, கிறிஸ்தவ சனத்தொகை 9 சதவீதத்திற்கும் அதிகமாகும்.

படம் 9: *2010 - 2014 மற்றும் 2010 - 2019 (ஒகஸ்ட்) இடைப்பட்ட காலத்தில் சம்பவங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சதவீத மாற்றம்*




சம்பவங்களின் எண்ணிக்கையில் சதவீத அதிகரிப்பு*

400% பொலனறுவை (36)
195% மட்டக்களப்பு (39)
127% கேகாலை (14)
118% கம்பஹா (20)
43% புத்தளம் (12)

சம்பவங்களின் எண்ணிக்கையில் சதவீத வீழ்ச்சி**

-90% மாத்தளை (9)
-76% மொனராகலை (13)
-73% இரத்தினபுரி (11)
-67% அம்பாந்தோட்டை (20)
-65% அநுராதபுரம் (13)

*2010 – 2014 காலப்பகுதியில் இடம்பெற்ற 1 சம்பவத்துடன் ஒப்பிடுகையில் அம்பாறையில் 12 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சம்பவங்களின் உச்சபட்ச அதிகரிப்பை தீர்மானிக்கும் போது இது கருத்தில் கொள்ளப்படவில்லை.

**2015 - 2019 (ஒகஸ்ட்) காலப்பகுதியில் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சம்பவங்களைப் பதிவு செய்த முதல் 5 மாவட்டங்களின் சதவீத மாற்றங்கள் இரண்டு காலப்பகுதிகளில் (அதாவது 2010 - 2014 மற்றும் 2015 - 2019) ஒப்பீடு செய்யப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

வேறுபட்ட மாதிரிகளைத் தவிர்க்கும் வகையில், ஒரே காலகட்டத்திற்கு குறைந்தது ஐந்து மத வன்முறைச் சம்பவங்களை அளவுகோலாக இந்த ஆய்வு முன்வைத்தது. 2010 முதல் 2014 இடைப்பட்ட காலத்தில் மாவட்டங்களில் குறைந்த அல்லது எந்தவித மத வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்றால் அளவுகோலுக்கு அப்பாற்பட்டது எனக் கருதப்படும். உதாரணமாக 2010 - 2014 ஆம் ஆண்டில் அம்பாறையில் ஒரேயொரு மத வன்முறை சம்பவம் மாத்திரமே நிகழ்ந்து. மாறாக 2015 - 2019 இல் 13 சம்பவங்கள் இடம்பெற்றன. இதன் காரணமாக மத வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் 1,200% அதிகரிப்பு ஏற்பட்டது. எனவே, அம்பாறையில் 1,200% அதிகரிப்பு ஏற்பட்டாலும், இது அதிக சதவீத அதிகரிப்பு பிரிவில் இருந்து நீக்கப்பட்டது.

அதேவேளை, கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிக சதவீத குறைப்பினை பதிவு செய்த முதல் ஐந்து மாவட்டங்களும் பெரும்பான்மையாக சிங்கள - பௌத்தர்கள் ஆதிக்கம் செய்யும் பிரதேசங்கள் ஆகும். இங்கு கிறிஸ்தவ சனத்தொகை 2 சதவீதத்திற்கும் குறைவாகும். இந்த முதல் ஐந்து மாவட்டங்களில் 60% முதல் 90% வரையில் சம்பவங்களின் எண்ணிக்கையில் சதவீத குறைப்பு பதிவாகியுள்ளது. மேலே அவதானிக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கையின் சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மத வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் சதவீத வீழ்ச்சியானது குறைவாகும் என்பதையே இது விளக்குகின்றது. குறிப்பாக மத வன்முறைச் சம்பவங்களில் சதவீத குறைவினை பதிவுசெய்த முதல் ஐந்து மாவட்டங்களில் அம்பாந்தோட்டை மாவட்டமும் ஒன்றாகும். 2010 முதல் 2014 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அம்பாந்தோட்டையில் அதிகளவான பதட்டங்களும், மத வன்முறைகளும் (30 சம்பவங்கள்) இடம்பெற்றன. எனினும், அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்ட பிறகு, அந்த மாவட்டத்தில் கிறிஸ்தவர்களினால் எதிர்கொள்ளப்பட்ட வன்முறைகள் 67 சதவீதத்தினால் குறைந்துள்ளது.


## (2) மாவட்டம் ஒன்றுக்கு, 100,000 கிறிஸ்தவர்களுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் வருடாந்த விகிதம்

இந்த ஆய்வில் பின்பற்றப்பட்ட முறை மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, மத வன்முறைகளை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்கு 2012 ஆம் ஆண்டு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்ட சனத்தொகை தரவுக்கு அமைய, மாவட்டத்தில் (ஒவ்வொரு காலகட்டத்திலும்) இடம்பெற்ற வன்முறைகளின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையினால் வகுக்கப்பட்டது. இரண்டாவதாக, ஒரு மாவட்டத்திற்கு 100,000 கிறிஸ்தவர்களுக்கு, மத வன்முறைகளுக்கு முகங்கொடுத்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இரண்டு காலகட்டங்களில் கணக்கிடப்பட்டது. இறுதியாக, ஒப்பீடு செய்வதற்காக இரண்டு காலகட்டத்திலும் ஒவ்வொரு புள்ளிவிபரமும் ஆண்டுகளின் எண்ணிக்கையினால் சராசரியாக்கப்பட்டது. மாவட்டம் ஒன்றுக்கு, 100,000 கிறிஸ்தவர்களுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் வருடாந்த விகிதத்தின் கணக்கீடு தொடர்பான விரிவான விளக்கம் இணைப்பு மூன்றில் வழங்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | மாவட்டம் ஒன்றில் மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை | | மாவட்டத்தில் கிறிஸ்தவ சனத்தொகை | மாவட்டத்துக்கு 100,000 கிறிஸ்தவர்களுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் வருடாந்த வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 2010 - 2014 | 2015 - 2019 | | 2010 - 2014 | 2015 - 2019 |
| மட்டக்களப்பு | 20 | 59 | 47,287 | 8 | 27 |
| பொலனறுவை | 9 | 45 | 4,468 | 40 | 216 |
| கம்பஹா | 17 | 37 | 495,478 | 1 | 2 |
| கேகாலை | 11 | 25 | 15,163 | 15 | 35 |
| அம்பாறை | 1 | 13 | 13,129 | 2 | 21 |
| களுத்துறை | 20 | 32 | 48,730 | 8 | 14 |
| புத்தளம் | 28 | 40 | 252,314 | 2 | 3 |
| குருநாகல் | 11 | 19 | 53,637 | 4 | 8 |
| திருகோணமலை | 2 | 9 | 22,267 | 2 | 9 |
| கண்டி | 13 | 19 | 35,177 | 7 | 12 |
| மன்னார் | 0 | 4 | 57,205 | 0 | 1 |
| யாழ்ப்பாணம் | 1 | 4 | 95,985 | 0 | 1 |
| வவுனியா | 1 | 4 | 23,803 | 1 | 4 |
| கிளிநொச்சி | 0 | 0 | 18,499 | 0 | 0 |
| முல்லைத்தீவு | 0 | 0 | 12,727 | 0 | 0 |
| நுவரெலியா | 0 | 0 | 48,984 | 0 | 0 |
| கொழும்பு | 24 | 23 | 229,308 | 2 | 2 |
| மாத்தறை | 14 | 13 | 5,640 | 50 | 49 |
| பதுளை | 6 | 4 | 18,635 | 6 | 5 |
| காலி | 25 | 21 | 9,730 | 51 | 46 |
| மாத்தளை | 10 | 1 | 10,241 | 20 | 2 |
| இரத்தினபுரி | 15 | 4 | 18,056 | 17 | 5 |
| அநுராதபுரம் | 20 | 7 | 10,407 | 38 | 14 |
| மொனராகலை | 17 | 4 | 2,460 | 138 | 35 |
| அம்பாந்தோட்டை | 30 | 10 | 2,831 | 212 | 76 |

24 மாவட்டங்களில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு 100,000 கிறிஸ்தவர்களுக்கும் ஐந்து கிறிஸ்தவர்கள் மாத்திரமே மத வன்முறைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பதை முடிவுகள் (மேலேயுள்ள அட்டவணையைப் பார்க்கவும்) காட்டுகின்றன. அதற்கு முன்னரான ஐந்தாண்டு காலப்பகுதியில் (2010 க்குப் பின்னர்) இந்த எண்ணிக்கை மேலும் ஒரு கிறிஸ்தவரினால் அதிகமாகக் காணப்பட்டது. எனினும், அனைத்து மாவட்டங்களிலும் முழுமையான புள்ளிவிபரங்கள் குறைவாக உள்ள போதும், மாவட்டம் ஒன்றுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் செறிவானது குறிப்பிடத்தக்க வகையில் மாறியுள்ளது. மத வன்முறைச் சம்பவங்களில் அதிக செறிவைக் கொண்ட முதல் ஐந்து மாவட்டங்களின் போக்குகள் மற்றும் வடிவங்களைக் கண்டறிவதற்காக ஆராயப்பட்டது. உதாரணமாக, 2010 - 2014 காலப்பகுதியில் ஆண்டொன்றுக்கு

படம் 10: *100,000 கிறிஸ்தவர்களுக்கு, மாவட்டம் ஒன்றுக்கு நிகழ்ந்த சம்பவங்கள்*




100,000 கிறிஸ்தவர்களுக்கு பதிவான அதிக எண்ணிக்கையிலான சம்பவங்கள்

- 216 பொலனறுவை
- 76 அம்பாந்தோட்டை
- 49 மாத்தறை
- 46 காலி
- 35 கேகாலை, மொனராகலை

100,000 கிறிஸ்தவர்களுக்கு பதிவான குறைந்த எண்ணிக்கையிலான சம்பவங்கள்

- 1 யாழ்ப்பாணம், மன்னார்
- 2 கொழும்பு, கம்பஹா, மாத்தளை
- 3 புத்தளம்

எந்த சம்பவங்களும் பதிவாகவில்லை

கிளிநொச்சி, முல்லைத்தீவு, நுவரெலியா

ஒவ்வொரு 100,000 கிறிஸ்தவர்களில் சுமார் 40 பேர் மத வன்முறைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள் என்பதை பொலனறுவை மாவட்டத்திற்கான முடிவு வெளிக்காட்டுகின்றது. இந்த எண்ணிக்கையானது 2015 - 2019 காலப்பகுதியில் 216 கிறிஸ்தவர்களாக (ஒவ்வொரு 100,000 கிறிஸ்தவர்களுக்கும்) அதிகரித்துள்ளது. 2015க்குப் பின்னரான இந்த அதிகரிப்பு பொலனறுவை மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் சுமார் ஐந்து மடங்கு அதிகமாக மத வன்முறைகளை எதிர்கொள்ள நேரிட்டதை சுட்டிக்காட்டுகின்றது. அதேபோன்று 2015க்குப் பின்னர், மட்டக்களப்பிலுள்ள கிறிஸ்தவர்கள் மும்மடங்கு அதிகமாக வன்முறைகளை எதிர்கொள்ள நேரிடும், கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் இவ்வாறான சம்பவங்களை இரு மடங்கு அதிகமாக எதிர்கொள்ள நேரிடும்.

# முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களைக் குறிவைத்து நடத்தப்படும் இன - மத வன்முறைகள் தொடர்பான ஆய்வு

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முஸ்லிம் மற்றும் இந்து சமூகத்தைக் குறிவைத்து இடம்பெறும் மத வன்முறைச் சம்பவங்களை ஆய்வின் இந்தப் பிரிவு ஆராய்கின்றது. இந்த சமூகங்கள் மீதான மத வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான தொகுக்கப்பட்ட மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகள் இல்லாத காரணத்தினால், உள்ளூர் மட்டத்தில் முஸ்லிம் மற்றும் இந்துக்களுக்கு எதிரான சம்பவங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதில் சவால் காணப்படுகின்றது. எனவே குறித்த ஒவ்வொரு சிறுபான்மை சமூகத்தின் மீதான மத வன்முறைச் சம்பவங்களை ஆராய்வதற்கு இந்த ஆய்வு இரண்டு அணுகுமுறைகளை பின்பற்றுகின்றது.

முதலாவதாக, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில், இந்த ஆய்வு "மோசமான" சம்பவங்களில் மாத்திரம் கவனம் செலுத்துகின்றது. உதாரணமாக ஜின்தோட்ட (நொவம்பர் 2017), திகன/தெல்தெனிய (மார்ச் 2018), குருநாகல்/ மினுவாங்கொட (மே 2019) ஆகிய இடங்களில் இடம்பெற்ற கலவரங்கள். இந்த ஆய்வில் "மோசமான" வன்முறை என்பது எளிதல் பரவக்கூடியதும், தீவிரம் அதிகம் உள்ள வன்முறையாக கருதப்படுகின்றது.[34]

இரண்டாவதாக, இந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு கிழக்கில் இந்துக்களை இலக்குவைத்து நடைபெறும் மத வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் சேகரித்த தரவுகளை இந்த ஆய்வு ஆராய்கின்றது. இந்த தரவுகள் மூன்றாம் தரப்பு ஆதாரங்கள் மூலம் சரிபார்க்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். இதனை மனதில் கொண்டு, 2018 ஒக்டோபர் முதல் 2019 நொவம்பர் வரையான காலப்பகுதியில் பத்திரிகைகளில் வெளியான இந்துக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களையும் இந்த ஆய்வு ஆராய்கின்றது.[35] இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் வழங்கப்பட்ட பெரும்பாலான தரவுகள், மற்றும் இந்துக்களுக்கு எதிராக பதிவான சம்பவங்கள் வடக்கு கிழக்கிலுள்ள இந்துக்களையே பெரும்பாலும் பாதித்துள்ளன. எனவே இந்துக்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான ஆய்வு, இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம் மற்றும் இந்து சமூகங்களுக்கு எதிரான வன்முறை இன மற்றும் மத அடிப்படையில் இடம்பெற்றதை கவனத்தில் கொள்ள வேண்டும். வன்முறையின் வேரூன்றிய இயல்பை, வன்முறை வெறுமனே "மத" அடிப்படையில் அன்றி "இன - மத" கருத்தியலில் பார்க்கும் போதே நன்கு புரிந்துகொள்ள முடியும் என குணதிலக்க குறிப்பிடுகின்றார்.[36] இந்த சூழலில், முஸ்லிம் மற்றும் இந்துக்களுக்கு எதிரான இன - மத வன்முறைகளுக்கான அடிப்படை காரணிகளையும் உண்மையான வன்முறைச் சம்பவங்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வதை இந்தப் பிரிவு நோக்கமாகக் கொண்டுள்ளது. முஸ்லிம் சம்பவங்களில் அரசாங்கத்தின் ஈடுபாட்டையும்

(அல்லது அதன் ஈடுபாடற்றதன்மையை) இந்தப் பிரிவு மேலும் ஆராய்கின்றது. 2015 இல் இதனைக் கட்டுப்படுத்துவதாக நல்லாட்சி அரசாங்கம் உறுதியளித்த போதும் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை தொடர்வதை இந்த பிரிவு விளக்க முற்படுகின்றது.

## இன - மத வன்முறையின் அடிப்படைக் காரணிகளுக்கும் உண்மையான வன்முறை சம்பவங்களுக்கும் இடையிலான தொடர்பு

சமூக - அரசியல் சூழல் என்ற பிரிவில் விபரித்ததைப் போன்று, பெரும்பான்மை சிங்கள - பௌத்த சமூகத்தின் சில பிரிவுகளில் காணப்படும் உரிமை மனோபாவம் மற்றும் இருத்தலியலுக்கான பாதுகாப்பின்மை என்பவையே சிறுபான்மை மீதான வன்முறையின் முக்கிய காரணிகளாக உள்ளன. "சிங்கள - பௌத்த தேசியவாதிகளின் கற்பனையின் அடிப்படை உருவமாக" வன்முறை உருவெடுத்துள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி (2016) வாதிடுகின்றார்.[37] இந்த சூழலில், தற்போது காணப்படும் சிறுபான்மையினர் மீதான வன்முறையானது நாட்டிலுள்ள சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை குறைத்து மதிப்பிடும் அச்சுறுத்தல்களுக்கு பதில் என விளங்கிக்கொள்ள முடியும்.

### முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை

முஸ்லிம் சமூகத்தின் மீது பெரும்பான்மை சிங்கள - பௌத்த மக்கள் கொண்டுள்ள எண்ணத்தில் இரண்டினை இந்த ஆய்வு கவனத்தில் கொள்கின்றது. இவ்வாறான எண்ணங்களே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்கு அடிப்படையாக அமைகின்றது. (1) மக்கள் தொகை மறுசீரமைப்பு (2) முஸ்லிம் சமூகத்தின் பொருளாதார வளம் ஆகியவை சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களாக பார்க்கப்படுகின்றன.[38]

#### *(அ) மக்கள் தொகை மறுசீரமைப்பு*

இலங்கையின் சனத்தொகையை மறுசீரமைக்கும் நிகழ்ச்சி நிரலுடன் இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் செயற்படுவதாக எண்ணப்படுகின்றது.[39] 1981 முதல் 2012 வரையான காலப்பகுதியில் (மொத்த சனத்தொகையில் 1981 ஆம் ஆண்டு 7 சதவீதமாகக் காணப்பட்ட முஸ்லிம் சனத்தொகை 2012 ஆம் ஆண்டில் 9.3 சதவீதமாக அதிகரித்துள்ளது) இலங்கையின் முஸ்லிம் சனத்தொகையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக இந்த எண்ணம் எழுந்துள்ளது. இந்த அதிகரிப்பானது சிங்கள - பௌத்த பெரும்பான்மையின் ஆதிக்கத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக பார்க்கப்படுகின்றது.[40]

இதன் விளைவாக, சிங்கள - பௌத்த சனத்தொகையை "அழிந்துபோகும்" நிலைக்குத் தள்ளுவதற்காக முஸ்லிம் சமூகம் இந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதாக கருதப்படுகின்றது.[41] இந்த எண்ணத்தின் வெளிப்பாடுகள் கடந்த சில ஆண்டுகளாக வெளிவருகின்றன. இதற்கு உதாரணமாக, உணவுப் பொருட்களில் "கருத்தடை மாத்திரைகளை" கலந்து முஸ்லிம் வர்த்தகர்கள் விற்பதாகவும், "சிங்கள இனம் உருவாவதை தடுப்பதற்கு" சிங்களப் பெண்களுக்கு விற்கப்படும் உள்ளாடைகளில் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் பொருட்களை முஸ்லிம்கள் பயன்படுத்துவதாகவும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.[42] முஸ்லிமுக்கு சொந்தமான பிரபல வர்த்தக நிலையமான நோ லிமிட்டில் (No Limit) இனிப்புக்கள் வழங்கப்படுவதாகவும், இதனை உட்கொள்ளும் சிங்கள தாய்மார்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுவதாகவும் பொதுபல சேனா பரப்பிய வெறுக்கத்தக்க செய்திகளும் இதில் அடங்கும்.[43] 2018 பெப்ரவரியில் அம்பாறையில் வெடித்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை நியாயப்படுத்துவதற்கு இந்தக் குற்றச்சாட்டுக்கள் பயன்பட்டன. அதற்கு சில வாரங்களின் பின்னர் திகன/ தெல்தெனியவில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்கு இது முன்னோடியாக அமைந்தது.

இந்த கலவரங்களில் முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன், அழிக்கப்பட்டன. அத்துடன் பல நபர்கள் காயங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். முஸ்லிம் மருத்துவர் ஒருவர் சிங்கள - பௌத்த தாய்மார்கள் மீது 4,000 "சட்டவிரோத கருத்தடை" சிகிச்சைகளை முன்னெடுத்தார் என்ற கூற்று தவறான எண்ணத்தில் அண்மையில் வெளியான ஒரு செய்தி ஆகும்.[44]

## (ஆ) பொருளாதார வளம்

இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகம் சிங்கள - பௌத்த சமூகத்தினை விட பொருளாதார ரீதியாக வளமிக்கது என்ற கருத்து காணப்படுகின்றது. இதற்கு அடிப்படையாக, முஸ்லிம்கள் பல தொழிற்துறைகள் மற்றும் வர்த்தக வலையமைப்புக்களில் ஆதிக்கம் செலுத்துவதாகவும், இதன் காரணமாக சிங்கள - பௌத்த வர்த்தகங்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் கருதப்படுகின்றது.[45] இது இரண்டு எதிர்மறையான விளைவுகளுக்கு பங்களித்துள்ளது.

முதலாவதாக இது "எதிர்மறையான பொருளாதார தேசிய வாதத்தின்" தோற்றத்திற்கு பங்களிப்பு செய்துள்ளது, அதாவது சிறுபான்மைக்கு எதிரான/தேசியவாத மனோபாவத்தைப் பயன்படுத்தி சந்தையில் அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளுதல். இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் முக்கியமாக தோற்றம் பெற்றுள்ளது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான வணிகங்களுடன் தொடர்புடைய பொருட்கள் மற்றும் சேவைகளைப் புறக்கணிக்க சிங்கள நுகர்வோர் ஊக்குவிக்கப்பட்டனர். சிங்கள - பௌத்த தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு சிங்கள நுகர்வோர் ஊக்கப்படுத்தப்பட்டனர். உதாரணமாக, சிங்கள - பௌத்த பெண்களுக்கு டாக்ஸி சேவைகளை வழங்கும் விளம்பரத்தை டாக்ஸி நிறுவனம் ஒன்று வெளியிட்டது. "சட்டவிரோத கருத்தடைக்கு" மாறாக அவர்களால் கருத்தரிக்க முடியும் என்பதை உறுதிசெய்ய இந்தப் பெண்கள் சிங்கள - பௌத்த மருத்துவர்களிடம் கூட்டிச்செல்லப்பட வேண்டும் என்ற வகையில் அந்த விளம்பரம் அமைந்திருந்தது. ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதிக்கு முன்னர், 2013 ஆம் ஆண்டில் பொதுபல சேனா "ஹலாலுக்கு எதிரான பிரச்சாரம்" ஒன்றை முன்னெடுத்தது. இந்த பிரச்சாரமானது ஹலால் உணவுகளை முற்றாக தடை செய்து "புனித சிங்கள உரிமையின்" பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என அழைப்பு விடுத்தது.[46] முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தகங்களின் போட்டித்தன்மையை தடுக்கும் இத்தகைய முயற்சிகள், "பொருளாதார கவலைகளும், ஏமாற்றங்களும் இன - மத வெறுப்பாக தூண்டப்படுகின்றன" என ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் குறிப்பிடுகின்றார்.[47]

இரண்டாவதாக, முஸ்லிம்களுக்கு எதிரான உண்மையான வன்முறைச் சம்பவங்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தகங்களை இலக்குவைத்து நடத்தப்படுவதை குறிப்பிட முற்படுகின்றது. ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில், முஸ்லிம்களுக்கு எதிரான நான்கு முக்கிய சம்பவங்கள் ஜின்தோட்ட (நொவம்பர் 2017), அம்பாறை (பெப்ரவரி 2018), திகன/தெல்தெனிய (மார்ச் 2018) மற்றும் குருநாகல்/மினுவாங்கொடயில் (மே 2019) இடம்பெற்றுள்ளன. இந்த வன்முறையின் முக்கிய இலக்குகள், சில சந்தர்ப்பங்களில் இந்த சம்பவங்கள் இடம்பெற்ற காலம் இவற்றைப் பார்க்கும் போது வர்த்தக நலன்களின் ஈடுபாட்டை சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக, இந்த வன்முறையின் சில முதன்மை இலக்குகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தகங்கள். மேலும், இந்த சம்பவங்கள் இடம்பெற்ற நேரம் - ஜின்தோட்ட மற்றும் திகன/தெல்தெனிய - கிறிஸ்மஸ் மற்றும் தமிழ் சிங்கள புத்தாண்டுக் காலங்கள் ஆகும்.[48] வழமையாக இந்தக் காலப்பகுதிகளில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவை அதிகரிக்கும், இது போட்டித்தன்மையைக் குறைப்பதற்கான வணிக நடைமுறைகளை ஊக்கப்படுத்தும். இந்த வன்முறைகள் இடம்பெற்ற நேரமானது முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தக நடவடிக்கைகளின் போட்டித்தன்மையைக் குறைப்பது நோக்கமாக இருக்கலாம்

என கருதப்படுகின்றது. எனவே முஸ்லிம் சமூகத்தினர் பொருளாதார செழிப்பாக இருக்கின்றார்கள் என்ற அவர்களது எண்ணம் முஸ்லிம்களை இலக்குவைத்து நடத்தப்படும் இன - மத வன்முறைகளுக்கு அடிப்படையாக இருக்கலாம்.

## இந்துக்களுக்கு எதிரான வன்முறை

2009 ஆம் ஆண்டில் ஆயுத மோதல் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, பெரும்பான்மை சிங்கள - பௌத்த சனத்தொகையின் சில பிரிவினர் தொடர்ந்தும் எல்லை தொடர்பான பாதுகாப்பின்மையை உணர்கின்றார்கள். இந்த பாதுகாப்பின்மையானது "அதிகார பரவலாக்கம்" மற்றும் காணி மறுசீரமைப்பு போன்ற விடயங்களை சிங்கள ஊடகங்கள் கையாளும் விதம் வெளிப்படுத்துகின்றது.[49] இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் பரவலாகக் காணப்படும் பாரபட்சம் இந்த எல்லைப் பாதுகாப்பின்மையை வெளிப்படையாகக் காட்டுகின்றது.

சிறுபான்மையினர் அதிகளவில் வாழும் பகுதிகள் அரசாங்கத்தினால் "சிங்களமயமாக்கல்/ பௌத்தமயமாக்கலுக்கு" உட்படுத்தப்படுவதை இந்துக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீதான வன்முறைகளுக்கு சான்றாக தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.[50] "யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் தங்களது கலாச்சார மற்றும் மத உரிமைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றது என்ற அச்சம் மற்றும் பாதுகாப்பின்மையை" வெளிப்படுத்துவதற்கு "சிங்களமயமாக்கல்/ பௌத்தமயமாக்கல்" என்ற சொற்பதம் தமிழ் - இந்து சமூகத்தினரால் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது (அத்துடன் தமிழ் ஊடகங்களிலும் காணப்படுகின்றது).[51] இதேவேளை, இதனை "அரசியல் ரீதியாக குற்றஞ்சாட்டப்பட்ட" சொற்பதம் என்று "சிங்கள தேசியவாதிகள்" இதனை மறுக்கின்றனர்.[52] வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவமயமாக்கப்படுதல், புதிய சிங்கள குடியேற்றங்கள் என "சிங்களமயமாக்கல்/ பௌத்தமயமாக்கலின்" பல்வேறு வடிவங்களை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது.[53] ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதியில் அதிகளவில் அறிக்கையிடப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட சிங்களமயமாக்கல்/பௌத்தமயமாக்கலின் இரண்டு வகைகளை மாத்திரம் தற்போதைய ஆய்வு கவனம் செலுத்துகின்றது.

### (அ) பௌத்த மத வழிபாட்டுத்தலங்கள் - சின்னங்களை நிர்மாணித்தல்

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் இந்துக் கோவிலின் வளாகத்திற்கு உள்ளே அல்லது ஏற்கனவே உள்ள இந்துக் கோயிலுக்கு அருகாமையில் பௌத்த விகாரைகளை அமைத்த சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மேலும், சிங்கள மக்கள் இல்லாத பிரதேசங்கள் உட்பட இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் புத்த சிலைகளை அமைப்பது குறித்து அறிக்கைகள் உள்ளன. உதாரணமாக, முல்லைத்தீவு நீராவியடி பிரதேசத்தின் செம்மலை பகுதியிலுள்ள பிள்ளையார் கோவில் 2018 ஆம் ஆண்டில் இராணுவம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு பின்னர் அங்கு புத்தர் சிலை நிர்மாணிக்கப்பட்டது.[54]

### (ஆ) மதரீதியான இடங்களுக்குப் போட்டி

வடக்கு கிழக்கில் உள்ள மத ரீதியான இடங்களுக்கு போட்டியானது பெரும்பாலும் அந்த இடத்தின் வரலாற்று அடையாளம் மற்றும் உரிமை கோரல்களை உள்ளடக்கியது. அண்மையில் திருகோணமலையின் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையிலுள்ள பகுதியை தொல்பொருள் தளமாக மாற்றியது (2019 ஜுலையில்) முக்கியமான நிகழ்வாகும். அநுராதபுர காலத்தில் பத்திக்க திஸ்ஸ என்னும் மன்னன் கட்டிய பழமையான பௌத்த தலம் என சிங்கள ஊடகங்கள் உரிமை கோரின. இராவணனின் ஆட்சியில் கட்டப்பட்ட பழமையான இந்துக்கோயில் இது என மற்றவர்கள் உரிமை கோரினர். இதேபோன்று, முல்லைத்தீவின் நாயாறு பகுதியிலுள்ள சமய ஸ்தலத்தை

"குருகந்த ரஜமஹா விகாரை" என சிங்கள ஊடகங்கள் உரிமை கோரின. அதேவேளை, அது "நீராவியடி பிள்ளையார் கோவில்" எனப்பெயர் பெற்ற பழமையான இந்துக் கோயில் என தமிழ் பத்திரிகைகள் உரிமை கோரின.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் இந்து சமய ஸ்தலங்கள் மீது பெரும்பான்மை இன - மத குழுக்கள் தங்களது பெரும்பான்மை அந்தஸ்தை உறுதிப்படுத்தும் இவ்வாறான சம்பவங்கள் "பெரும்பான்மை ஆதிக்கத்தின் வேண்டுமென்ற வெளிப்பாடுகள்" என தமிழ் சமூகம் பார்க்கின்றது. மறுபுறம், ஆயுத மோதல் முடிவுக்கு வந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழர்களின் இருத்தலியலுக்கான பாதுகாப்பின்மையை இந்த சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.[55] அரசின் ஆதரவுடனான சிங்களமயமாக்கல்/பௌத்தமயமாக்கலின் விளைவாக இந்த சமூகங்களது அடையாளம் மற்றும் உரிமைகள் எவ்வாறு நசுக்கப்படுகின்றது என்பதை இவை வெளிப்படுத்துகின்றன.[56] மறுபுறம், சிங்கள - பௌத்த சமூகத்தின் "வடக்கு (மற்றும் கிழக்கில்) பௌத்த பாரம்பரியங்களை அச்சுறுத்தல்களில்" இருந்து (பாதுகாப்பதற்கான) உரிமையை இந்த சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.[57] ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் கூட சிறுபான்மையினர் மீதான வன்முறைகள் தொடர்வதற்கான காரணத்தை முஸ்லிம் மற்றும் இந்துக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கான அடிப்படைக் காரணிகள் விளக்குகின்றன.

## அரசின் ஈடுபாடு (அல்லது அதன் ஈடுபாடற்றதன்மை)

2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது சிறுபான்மையினர் மீதான வன்முறைகள் கட்டுப்படுத்தப்படும், அத்துடன் அனைத்து சமூகத்தினரின் சமய நம்பிக்கைகளை முன்னெடுப்பதற்கான சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையைப் புதுப்பித்தது. ஆனால் அதன் பதவிக் காலத்தின் முடிவில், நல்லாட்சி அரசாங்கம் இன - மத வன்முறைகளைத் தூண்டுவதாகவும், முன்னைய அரசாங்கத்தில் காணப்பட்ட சலுகைகளை வலுப்படுத்துவதாகவும் பரவலாக குற்றஞ்சாட்டப்பட்டது. நாட்டின் சிறுபான்மை இன - மத குழுக்கள் மீதான அரசாங்கத்தின் நேர்மறை மற்றும் எதிர்மறை கடமைப்பாடுகளை பூர்த்தி செய்யத் தவறியதன் காரணமாகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் தோன்றின.

சிறுபான்மையினர் மீதான வன்முறையில் அரசாங்கத்தின் செயல் (அற்ற தன்மை), அரச நிறுவனங்களுக்கு உள்ளே சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதம் மிக ஆழமாக வேரூன்றியதன் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வாதத்தின் பிரகாரம், பெரும்பான்மை இன - மதக் குழு (சிங்கள - பௌத்தர்கள்) அரசாங்கத்தின் அனைத்துப் பாகங்களிலும் வேரூன்றி அதனை ஊக்கப்படுத்துவதுடன், அனைத்து மட்டங்களிலும் நிர்வாக கட்டமைப்புக்களை சிதைத்துள்ளதாக குணதிலக்க வாதிடுகின்றார்.[58] நீல் டிவொட்டாவின் கூற்றின்படி, அரசாங்கத்தின் முடிவு எடுக்கும், அதனை பயன்படுத்தும், தீர்ப்பளிக்கும் மற்றும் அமுலாக்கும் நிறுவனங்கள் குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு மாத்திரம் முன்னுரிமை அளிப்பதுடன், பிற குழுக்களின் நியாயமான பிரச்சினைகளை புறக்கணிக்கும் போது "நிறுவன சிதைவு" ஏற்படுவதாக குறிப்பிடுகின்றார்.[59] 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முஸ்லிம் மற்றும் இந்து சமூகத்தினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கான அரசாங்கத்தின் பதிலில் நிறுவன சிதைவு ஏற்பட்டுள்ளது தெளிவாகத் தெரிகின்றது.

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் பின்னணியில் நிறுவன சிதைவுக்கான உதாரணங்கள்

2017 ஆம் ஆண்டு ஜின்தோட்டவில் வாகன விபத்தினை அடுத்து அந்தப் பகுதியில் சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் போது "சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த" விசேட அதிரடிப்படை இராணுவம் கொண்டுவரப்பட்டது. ஆரம்ப கட்ட மோதல்கள் குறைந்ததும் விசேட அதிரடிப்படை "முன்கூட்டியே விலக்கப்பட்டது".[60]

எனினும், அவர்கள் விலக்கப்பட்டதும் அந்தப் பகுதியில் முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து வன்முறைகள் வெடித்தன. இதேவேளை, 2018 ஆம் ஆண்டு திகன/தெல்தெனியவில் ஆயுதம் தாங்கிய விசேட அதிரடிப் படையினர் மற்றும் காவற்துறை விசேட பிரிவினர் இருந்த போதே முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை குற்றவாளிகள் முன்னெடுத்ததை சிசிடிவி காட்சிகள் மற்றும் சம்பவத்தை நேரடியாகக் கண்ட சாட்சிகளின் அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.[61] குறிப்பாக, 2018 ஆம் ஆண்டு திகன/தெல்தெனிய மற்றும் 2019 இல் குருநாகல்/மினுவாங்கொட ஆகிய இரண்டிலும் காவற்துறையினால் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட போதும், ஜனாதிபதியினால் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்ட போதும் வன்முறைகள் தொடர்ந்தன.[62] நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டத்தை அமுலாக்க வேண்டிய உத்தியோகத்தர்கள், கும்பல்கள் வன்முறையை முன்னெடுத்த போது வெறுமனே "பார்வையாளர்களாக" இருந்துள்ளது பரவலாக தெரிவிக்கப்பட்டது.[63]

2019 ஆம் ஆண்டு குருநாகல்/ மினுவாங்கொடயில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தொடர்ந்து, இலங்கைக்கான மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில், "ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதல்களுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பழிவாங்கும் வன்முறையை தடுப்பதற்கு சாத்தியம் காணப்பட்ட போதும் எந்தவித தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.[64] அந்தப் பகுதியில் மேலதிக காவற்துறை உத்தியோகத்தர்கள்/ விசேட அதிரடிப்படையினரை கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வன்முறையுடன் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்ட (அல்லது விசாரிக்கப்பட்ட) நபர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நிபந்தனையில் விடுவிடுக்கப்பட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.[65]

## இந்துக்களுக்கு எதிரான வன்முறையின் பின்னணியில் நிறுவன சிதைவுக்கான உதாரணங்கள்

இந்துக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களில், இந்த ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்ட பத்திரிகை மற்றும் சம்பவ அறிக்கைகளின் அடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்கில் "சிங்களமயமாக்கல்/ பௌத்தமயமாக்கல்" என்று கூறப்படும் முயற்சிகளில் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் திணைக்களம் தலைமை தாங்கி செயற்பட்டதை அடையாளம் காணமுடிகின்றது. குறிப்பாக, இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களை இலக்குவைத்து தொல்பொருள் திணைக்களத்திலுள்ள அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதாக தமிழ் ஊடகங்களில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.[66] "வடக்கு மற்றும் கிழக்கில் சிங்கள பெரும்பான்மை ஆதிக்கத்தை ஊக்கப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் கையாக" இந்த அதிகாரிகள் சித்தரிக்கப்படுகின்றனர்.[67]

இவர்களைத் தவிர, இந்த சம்பவங்கள் இடம்பெற்ற போது உள்ளூர் மற்றும் தேசிய மட்ட அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் எவ்வாறு மௌனமாக இருந்தார்கள் என தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் சம்பவ அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. உதாரணமாக, 2015 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னாரில் "மாதோட்டம் ரஜ விகாரை" என்ற பௌத்த விகாரையை திறந்துவைக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவிருந்தார். அந்த விகாரை அனுமதியின்றி திருக்கேதீஸ்வரம் சிவன் கோவில் வளாகத்தில் இராணுவத்தின் உதவியுடன் கட்டப்பட்டது என்று அறிந்த பின்னர் அவர் திறப்புவிழா நிகழ்ச்சிக்கான அழைப்பை மறுத்திருந்தார். அதேவேளை, மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் இந்த விடயம் தொடர்பில் மௌனம் காத்தார்கள். இந்த உதாரணம் வடக்கில் மத வழிபாட்டுத் தலங்களின் உரிமைக்கான

போட்டிகள் தொடர்பாக அரசின் செயலற்ற தன்மையைக் காட்டுகின்றது.

சிறுபான்மையினர் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதாக நல்லாட்சி அரசாங்கம் உறுதியளித்திருந்தாலும், வன்முறைகள் தொடர்வதை இந்த ஆய்வு விபரிக்க முயல்கின்றது. இன - மத வன்முறைகளுக்கான அடிப்படைக் காரணிகள் 1) பெரும்பான்மை சிங்கள - பௌத்தர்களின் உரிமை மனோபாவம், மற்றும் 2) அவர்கள் உணரும் இருத்தலியலுக்கான பாதுகாப்பின்மை என்பதை இந்த ஆய்வு முன்வைக்கின்றது. இன - மத வன்முறைச் சம்பவங்கள் அனைத்திலும் காணப்படும் இந்தக் காரணிகள் பெரும்பான்மை குழுக்களினால் அச்சுறுத்தல் அல்லது பாதுகாப்பின்மை ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்வினையாற்றுகின்றது என்பதைக் குறிக்கின்றது. மேலும், ஆய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பகுதிக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களிலும் இந்தக் காரணிகள் காணப்பட்டன என்பது, இன - மத வன்முறைகளில் குற்றவாளிகளைத் தூண்டும் பெரும்பான்மைவாத சிக்கல்கள் நீண்டகாலமாக காணப்படுகின்றது என்பதை காட்டுகின்றது. குறிப்பாக, இன - மத வன்முறைகளில் பெரும்பான்மைவாதம் ஆழமாக வேரூன்றி உள்ளது என்பது அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் செயல் (அற்ற தன்மை) வெளிப்படையாக காட்டுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட முஸ்லிம் மற்றும் இந்துக்களுக்கு எதிரான வன்முறைகளை தூண்டும் மற்றும் குற்றம் புரியும் மூன்றாம் தரப்பு/ அரசு சாராதவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறும் போது மேலதிக சலுகை போன்ற அடுக்கு உருவாக்கப்படுகின்றது. இது சிறுபான்மையினர் மீது மேலும் வன்முறைக்கு வித்திடுகின்றது.

# முடிவுரை

சிறுபான்மை மதத்தவர்கள் மீதான அணுகுமுறையின் போக்கினை 2015க்குப் பின்னரான காலப்பகுதியுடன் 2015க்கு முன்னரான காலப்பகுதியை ஒப்பிட்டு ஆராய்வதையே இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆட்சியில் உள்ள அரசாங்கம் எதுவாக இருந்தாலும் சிறுபான்மையினர் மீதான இன - மத வன்முறைகள் தொடர்கின்றன என இந்த ஆய்வு முடிவு செய்கின்றது.

சிறுபான்மை மதத்தினர் மீதான துன்புறுத்தலுக்கு ஆதரவான சூழலை அமைத்துக் கொடுப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறித்து இந்த ஆய்வு கவனம் செலுத்துகின்றது. அரசு சாராதவர்கள் குற்றங்களை முன்னெடுக்கவும், வன்முறைகளில் இருந்து சிறுபான்மை மதத்தவர்களை பாதுகாப்பதற்காக அதன் கடமைப்பாட்டை பூர்த்தி செய்யவும் அரசாங்கம் தவறிவிட்டதை காணமுடிகின்றது. எனவே, உலகின் பிற பாகங்களில் காணப்படுவது போன்று, இலங்கையிலும் அரசாங்கத்தின் செயல் அல்லது செயலற்ற தன்மையினால் மத வன்முறைகள் மாறாமல் நீடிக்கின்றன.[68]

இந்த ஆய்வு ஜனவரி 2015 முதல் ஓகஸ்ட் 2019 வரையான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற கிறிஸ்தவ சமூகத்திற்கு எதிரான 397 மத வன்முறைச் சம்பவங்களை ஆராய்ந்தது. 70 சதவீதமான சம்பவங்களில் பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை பின்பற்றப்பட்டதுடன், அவற்றில் 50 வீதத்திற்கும் அதிகமானவற்றில் குற்றவாளிகளாக அரசாங்க அதிகாரிகளே உள்ளனர். ஒட்டுமொத்தமாக, உடல் ரீதியற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு அரசு உடந்தையாக இருந்தது. அதன் பிரகாரம் அரசு தலைமையிலான வன்முறைகள் கட்டமைக்கப்பட்ட, முறையான மற்றும் உள்ளூர் மட்டத்தினாலானது என்பதை முக்கிய குற்றவாளியாக அரசாங்கம் உள்ள தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

சிறுபான்மை கிறிஸ்தவர்களின் உரிமைகளில் அரசாங்கத்தின் நேரடித் தலையீடு காணப்படுவதுமன்றி, கிறிஸ்தவர்களின் உரிமையை மூன்றாம் தரப்பு/அரசு சாராதவர்கள் முக்கியமாக பௌத்த பிக்குகளின் மீறலில் இருந்து பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டதை 2015க்குப் பின்னரான தரவுகள் வெளிக்காட்டுகின்றன. முக்கிய குற்றவாளிகளாக பௌத்த பிக்குகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு விதிவிலக்கு மற்றும் சலுகை போன்ற விசேட அந்தஸ்தை வழங்கியதில் அரசாங்கத்தின் பங்கினை இந்த தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. முக்கிய குற்றவாளி பௌத்த மதகுருவாக இருக்கும் போது முதன்மை இலக்கிற்கு காவற்துறை சாதகமாக தலையிடுவது குறைவு என்று இந்த ஆய்வு வெளிப்படுத்தியது.

இந்த ஆய்வு முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் மீதான வன்முறைகள் குறித்து ஆராய்ந்துள்ளது. முஸ்லிம் அல்லது இந்து சமூகத்தின் மீதான வன்முறையில் அரசாங்கத்தின் ஈடுபாடு (அல்லது ஈடுபாடற்ற தன்மை) அரச நிறுவனங்களில் சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாத நிலையைப் பயன்படுத்தி ஆராயப்பட்டது. வேரூன்றியுள்ள பெரும்பான்மைவாதத்தினால் நிறுவன சிதைவு/ சட்ட அமுலாக்க அதிகாரிகள் உள்ளிட்ட

அரசாங்கத்திற்குள் பாரபட்சம் ஆகியவற்றுக்கு வழிவகுத்துள்ளது என்பதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கிறிஸ்தவ, முஸ்லிம் மற்றும் இந்து சமூகங்கள் மீதான இன - மத வன்முறைச் சம்பவங்களில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் நிறுவன சிதைவு/சார்பு நிலைக்கான வலுவான ஆதாரங்கள் இருப்பதாக முடிவு செய்கின்றது.

# பின்னிணைப்பு

## பின்னிணைப்பு 1

### தீங்கின் வகை: உடல் ரீதியான வன்முறைகளைக் கொண்ட சம்பவங்கள்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து, தனிநபர்களுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை மற்றும் சொத்துக்களை அழித்தல் தொடர்பான தீங்கின் வகையை இந்தப் பிரிவு ஆராய்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது தேசிய மட்டத்தில் இடம்பெற்ற நபர்களுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை மற்றும் சொத்துக்களை அழித்தல் ஆகிய இரண்டையும் கொண்ட விதிவிலக்கான சம்பவமாக கருதப்படுகின்றது.

ஆய்வுக்கு உட்படுத்தப்படும் போருக்கு பின்னரான இரண்டு காலப்பகுதிகளிலும் (2010 - 2014 மற்றும் 2015 - 2019 - சராசரியாக ஒவ்வொரு ஆண்டுக்குமான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கைகளை படம் 3 இல் பார்க்கவும்) நபர்/நபர்களுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை அல்லது சொத்துக்களை அழித்தல் ஆகியவற்றில் ஏதாவதொன்று மாதத்திற்கு இரண்டு தடவைகள் இடம்பெற்றுள்ளன. சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் என்ற வகைப்படுத்தலின் கீழ் இடம்பெற்ற சம்பவங்களில் தேவாலயங்கள் மற்றும் கிறிஸ்தவ வீடுகள் மீது கல்லெறிதல் மற்றும் தீ வைப்பது வரை இடம்பெறுகின்றது. இதேவேளை, உடல் ரீதியான வன்முறையானது மதபோதகர்கள் அல்லது தேவாலயங்களுக்குச் செல்பவர்கள் மீதான உடல் ரீதியான தாக்குதலை உள்ளடக்கியது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் வரை, கிறிஸ்தவ சமூகம் மீதான வன்முறைச் சம்பவங்கள் குறைந்த அளவிலான தீவிரத்தன்மை காரணமாக அவை “நாள்பட்டவை” எனக் கருதப்பட்டன.[69] ஆனால், 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் (மற்றும் கொழும்பிலுள்ள ஹோட்டல்கள்) மீது நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த மற்றும் அதிநவீன தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் கடந்த 25 வருடங்களில் (1994 - 2018) காணப்பட்ட போக்குகளில் முரண்பாடாக இருந்தது. இந்த தாக்குதல்களில் 250 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததுடன், 485க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.[70] அத்துடன் சொத்துக்களுக்கும் அதிக சேதம் விளைவிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இரண்டு குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை சுட்டிக்காட்டுகின்றன. அவை: (1) கிறிஸ்தவ சமூகத்தின் மீதான வன்முறையின் வழமையான வடிவம் மற்றும் அளவிலிருந்து மாறுபடுகின்றது, மற்றும் (2) இலங்கையில் சிங்கள - பௌத்த தலைமையிலான வன்முறையின் நீடித்த வடிவத்திலிருந்து மாறுபடுகின்றது. இந்த சம்பவத்தின் குற்றவாளிகள் இஸ்லாமிய குழுக்களுக்கு சொந்தமானவர்கள் அல்லது இஸ்லாமிய சித்தாந்தத்தை பின்பற்றுபவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது மாறுபாடு இலங்கையின் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே புதிய “பாதிக்கப்பட்டவர்கள் - குற்றவாளிகள் என்ற இரு பிரிவுகளின்” தோற்றத்திற்கு வழிவகுத்துள்ளது.[71]

# பின்னிணைப்பு 2

## கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத வன்முறைச் சம்பவங்களில் அதிக செறிவைக் கொண்ட இரண்டு மாவட்டங்களின் பண்புகள்: மட்டக்களப்பு மற்றும் பொலனறுவை

2015 - 2019 இடைப்பட்ட காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டம் மட்டக்களப்பு (59), அதனைத் தொடர்ந்து பொலனறுவை (45). இரு மாவட்டங்களின் தரவுகளிலும் பொதுவாக காணப்பட்ட ஒரு அம்சம் என்னவென்றால், 2015 க்குப் பின்னரான காலப்பகுதியில் பதிவான அடிக்கடி இடம்பெறும் தீங்கின் வகையாக *பாரபட்சமான* செயல் அல்லது நடைமுறை காணப்படுகின்றது. எனினும், குறிப்பிட்ட பகுதிகளில் பெரும்பான்மை இன - மத குழுக்களினால் முன்னெடுக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் மீதான பாரபட்சமான நடவடிக்கையின் சில வடிவங்களில் மாறுபாடு காணப்படுகின்றதை அவதானிக்க வேண்டும். உதாரணமாக கிறிஸ்தவர்களின் புதைப்பதற்கான உரிமைகளில் மத ரீதியான பாரபட்சம் காட்டப்பட்டமை மேலே குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களில் ஒன்றுக்கு தனித்துவமானது.

அதிக எண்ணிக்கையிலான வன்முறைச் சம்பவங்களைக் கொண்ட இரண்டு மாவட்டங்களும் சனத்தொகையின் இன - மத வீதங்களின் அடிப்படையில் கூர்மையான மாறுபாட்டை முன்வைக்கின்றன. 2012 ஆம் ஆண்டின் சனத்தொகை புள்ளிவிபரத்தின் அடிப்படையில் மட்டக்களப்பின் பெரும்பான்மை இன சமூகமாக 72.7% தமிழர்கள் உள்ளனர், அவர்களைத் தொடர்ந்து 25.4% இலங்கை முஸ்லிம்களும், 1.3% சிங்களவர்கள் மற்றும் 0.5% பர்கர்களும் உள்ளனர்.[72] மட்டக்களப்பின் மத சமூகங்களைப் பார்க்கும் போது கிறிஸ்தவர்கள் சிறுபான்மை சமூகமாகவும் (8.9%) இந்துக்கள் மத பெரும்பான்மையானவர்களாகவும் (64.4%) காணப்படுகின்றனர். இவர்களைத் தொடர்ந்து இஸ்லாமியர்கள் (25.5%) உள்ளனர்.[73] இதற்கு மாறாக பொலனறுவையின் இன மற்றும் மத பெரும்பான்மை சிங்கள - பௌத்தர்களை (90.7% சிங்களவர்கள் - 89.7% பௌத்தர்கள்) கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் சிறுபான்மை மதத்தவர்களாக உள்ளதுடன், இவர்கள் பொலனறுவையின் சனத்தொகையில் 1.1 சதவீதமே உள்ளனர்.

இந்த சூழலில் மட்டக்களப்பு மற்றும் பொலனறுவையில் பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை என வகைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் (i) கிறிஸ்தவ வழிபாட்டுத்தலங்களை நிர்மாணிப்பது, அல்லது (ii) கிறிஸ்தவ மத நடவடிக்கைகளை முன்னெடுப்பதை தடுப்பதுடன் தொடர்புடையதாகும். எனினும், புதைப்பதற்கான சடங்குகளுடன் தொடர்புடைய பெரும்பான்மையான சம்பவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன. பெரும்பான்மை (இந்துக்கள்) மதத்தின் பிரகாரம் இறுதிச்சடங்குகள் நடத்தப்பட வேண்டும் என கிறிஸ்தவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டது மற்றும் அவர்களுடைய இருப்பிடங்களில் இருந்து வேறு இடத்திற்கு அடக்கம் செய்யும் இடத்தை மாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குணதிலக்க அவர்கள் குறிப்பிட்டது போன்று, புதைப்பதற்கான

இடம் மறுக்கப்பட்டமைக்குப் பின்னால் இரண்டு காரணிகள் உள்ளன. ஒருபுறம், "கிறிஸ்தவர்களின் கல்லறைகளின் அதிக எண்ணிக்கை பெரும்பான்மை மதத்தின் ஆதிக்கத்தை குறைத்து மதிப்பிட உதவும்", இந்த சம்பவத்தில் மட்டக்களப்பில் உள்ள பெரும்பான்மை சமூகம் இந்து சமூகம் ஆகும். மறுபுறம், இந்துக்களின் நம்பிக்கையின் பிரகாரம் இறந்தவர்கள் புதைக்கப்படுவதற்குப் பதிலாக தகனம் செய்யப்பட வேண்டும் என்ற "ஆன்மிக நம்பிக்கை" காரணமாக புதைப்பதற்கான உரிமை மறுக்கப்படுகின்றது.[74] இறுதிச் சடங்குகள் தொடர்பிலான பாரபட்சமான நடவடிக்கைகள் முக்கியமாக மட்டக்களப்பில் (இந்துக்களின் ஆதிக்கமுள்ள பிரதேசம்) காணப்படும் போதும், இறுதிச்சடங்குகள் தொடர்பில் பிரச்சினைகளும், பதட்டங்களும் புத்தளத்திலும் (பௌத்தர்கள் ஆதிக்கமுள்ள பிரதேசம்) பதிவாகியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட இன - மத கட்டமைப்பைக் கொண்ட பகுதிகளில் இறுதிச்சடங்கு தொடர்பில் காணப்படும் பதட்டங்கள், இறுதிச்சடங்குகளில் பௌத்தர்களும், இந்துகளும் ஒரே நம்பிக்கையைக் கொண்டிருப்பது காரணமாக இருக்கலாம். உதாரணமாக, இரண்டு சமூகமும் மறுபிறப்பு என்ற ஒரே நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்கின்றன.[75]

# பின்னிணைப்பு 3

## மாவட்டம் ஒன்றுக்கு, 100,000 கிறிஸ்தவர்களுக்கு மத வன்முறைச் சம்பவங்களின் வருடாந்த வீதத்தைக் கணக்கிடுதல்

2010 - 2014 வரையிலான சம்பவங்களின் வருடாந்த வீதத்தைக் கணக்கிடுவதற்கான உதாரணம் வழங்கப்பட்டுள்ளது.

சமன்பாடு (1) 2010 - 2014 வரையில் மட்டக்களப்பிலுள்ள கிறிஸ்தவர் ஒருவர் எதிர்கொண்ட சம்பவங்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுகின்றது. இது 2010 - 2014 வரையில் மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட சம்பவங்களை மட்டக்களப்பிலுள்ள மொத்த கிறிஸ்வர்களின் எண்ணிக்கையினால் வகுக்கின்றது.

சம்பவங்களின் வருடாந்த விகிதத்தைக் கணக்கிடுவதற்கு சமன்பாடு (1) ஆய்வுக்கு உட்படுத்தப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கையினால் வகுக்கப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதி 5 ஆண்டுகளின் தரவுகளைக் கொண்டது, எனவே சமன்பாடு (1) 5 இனால் வகுக்கப்பட்டு சம்பவங்களின் வருடாந்த வீதம் கண்டறியப்படுகின்றது. இது பின்னர் 100,000 பெருக்கப்படுகின்றது, இது மட்டக்களப்பிலுள்ள 100,000 கிறிஸ்தவர்களுக்கான சம்பவங்களின் வருடாந்த வீதம் ஆகும்.

சமன்பாடு 1: $20/47287 = 0.0004$

சமன்பாடு 2: $[(20/47287)/5] \times 100{,}000 = 8$

# சம்பவங்களின் ஆய்வுமுறை மற்றும் வகைப்படுத்தல்

கீழே வழங்கப்பட்டுள்ள ஆய்வுமுறையானது 2013 ஆம் ஆண்டில் வி.ஆரினால் உருவாக்கப்பட்டதுடன், 1994 முதல் 2014 வரையான காலப்பகுதியில் கிறிஸ்தவர்களின் மத சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளை ஆராய்ந்த இதற்கு முன்னரான ஆய்வில் வி.ஆரினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சம்பவம் மற்றும் சம்பவத்துக்கான அடையாளம்

ஒவ்வொரு சம்பவத்திற்கும் தனித்துவமான அடையாளம் திகதியின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு சம்பவம் ஒரு தனியான தரவு. எனவே, மத வன்முறை தொடர்பான தொடர்ச்சியான செயல்கள் அல்லது ஒரே இடத்தில் வெவ்வேறு நேரங்களில் இடம்பெற்ற பல சம்பவங்கள் தனித்தனி சம்பவங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. தனித்தனி சம்பவங்களாக தகுதி பெறுவதற்கு, சம்பவங்கள் இடம்பெற்ற நேரங்கள் ஒரே நாளாகவோ அல்லது வேறொரு நாளில் இடம்பெற்றதாகவோ இருக்கலாம். மேலும், "சம்பவம்" என தகுதிபெறுவதற்கு மத ரீதியாக இடம்பெற்ற வன்முறையாக[உ] இருக்க வேண்டும், கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள பிரிவுகளில் "சம்பவத்தின் வகை" வருவதைக் கண்டறிய போதுமான தரவுகள் காணப்பட வேண்டும்.

## தீங்கின் வகை

தீங்கின் வகைகளுக்கான வரையறைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த ஐந்துவகைகளுக்குள் வராத எந்த அறிக்கையும் சம்பவம் என வகைப்படுத்தப்படாது. ஒரு தனியான சம்பவம் ஒன்றுக்கும் மேற்பட்ட தீங்கின் வகைகளைக் கொண்டிருக்கலாம்.

**1.** சொத்துக்களை சேதப்படுத்துதல் அல்லது அழித்தல் - சட்டவிரோதமாக உள்ளே நுழைதல், சேதப்படுத்துதல் அல்லது தனிநபர், நிறுவனம் அல்லது குழுவுக்குச் சொந்தமான சொத்தின் மீது வேறு வகையான தாக்குதல்.

**2.** உடல் ரீதியான வன்முறை - வலுக்கட்டாயமாக கட்டுப்படுத்துதல், தாக்குதல், பாலியல் வன்புணர்ச்சி, கடத்தல் மற்றும் கொலை உள்ளிட்ட நபர்/களுக்கு எதிரான வன்முறை, ஆனால் இவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை.

**3.** வெறுக்கத்தக்க பேச்சு – மதம், மத நடவடிக்கைகள், மத அடையாளங்கள், வழிபாட்டுத் தலங்கள், மத சமூகங்கள் அல்லது மத தொடர்பினால் மதத்தைப் பின்பற்றும் ஒரு சமூகம் ஆகியவற்றுக்கு எதிராக அச்சிடப்பட்ட பொருட்கள், கூட்டங்கள், பேரணிகள் அல்லது

(உ) பாரபட்சம் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சு உள்ளிட்ட கட்டமைக்கப்பட்ட கூறுகளையும் உள்ளடக்குவதற்காக வன்முறை என்ற சொற்பதம் பரவலாக வரையறுக்கப்படுகின்றது.

ஊடகப் பிரச்சாரம் மூலமாக தாக்கும் வகையில் கருத்துக்களை வெளிப்படுத்துவது அல்லது உணர்வுகளைத் தூண்டுவது

**4.** அச்சுறுத்தல், மிரட்டல் அல்லது வற்புறுத்தல் - வாய்மொழி அச்சுறுத்தல்கள், தொலைபேசி அழைப்புக்கள் அல்லது நபர்கள் அல்லது சொத்துக்களுக்கு எதிரான நேரடியான தாக்குதலின்றி நபர்/களை அவர்களது விருப்பத்திற்கு எதிராக செயற்பட அச்சுறுத்துதல் அல்லது கட்டாயப்படுத்துதல்

**5.** பாரபட்சமான செயல் அல்லது நடைமுறை – மத அடிப்படையில் எந்தவொரு வகையான பாரபட்சம், சேவைகளை மறுத்தல் அல்லது மட்டுப்படுத்துதல், இன - மத குழுவின் அடிப்படையில் வித்தியாசமாக நடத்துவதன் மூலம் அவர்களை மட்டுப்படுத்துதல் அல்லது மறுத்தல் உள்ளிட்டவை ஆனால் இவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. அரசாங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் இந்த வகை மட்டுப்படுத்தப்படவில்லை, ஆனால் பட்டியலிடப்பட்ட வகைகளில் எந்தவொரு "முக்கிய குற்றவாளிக்கும்" பொருந்தும்.

## முக்கிய குற்றவாளிகள்

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் அறிக்கைகளில் அடையாளம் காணப்பட்ட முதன்மை குற்றவாளிகளின் வகைகளுக்கு அமைய குற்றவாளிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**1.**

(அ) அரசியல்/சமூக இயக்கம் அல்லது அரசியல்வாதிகள் - வன்முறைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தில் எந்தவித பொறுப்பினையும் வகிக்காத போதும் பெயர் அல்லது அரசியல் பிரமுகராக தம்மை அடையாளம் காணும் எந்தவொரு குழுவையும் இது குறிக்கின்றது. உதாரணமாக, மாகாணசபைத் தலைவர் இந்த வகைப்படுத்தலின் கீழ் வருவார், ஆனால் மாகாண சபை அமைச்சர் "பொது சேவகர்" என்ற கீழ் உள்ள வகைப்படுத்தலின் கீழ் கருதப்படுவார்.

(ஆ) பௌத்த பிக்குகளைக் கொண்ட அல்லது பௌத்த பிக்குகள் தலைமை தாங்கும் அரசியல்/சமூக இயக்கம்

**2.** அடையாளம் காணப்படாத தனிநபர் அல்லது குழு – வன்முறையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் யாரென தெளிவாக இல்லாத போது அல்லது குறிப்பிடப்படாத போது

**3.** நிறுவனம் அல்லது பொது சேவகர் - தொடர்புடைய நிறுவனம் அல்லது நபர் அரசாங்கத்துடன் சட்டரீதியான தொடர்பினைக் கொண்டிருக்கும் போது மாத்திரம் பயன்படுத்தப்படும். இதில் பொது அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்களும் அடங்குவார்கள் (உதாரணம்: அரசாங்கத்தினால் நடாத்தப்படும் பாடசாலைகள், அரசாங்க நிர்வாகிகள், அமைச்சர்கள்)

(அ) மத நிறுவனங்கள் அல்லது மதகுருமார்கள் - மத அமைப்பின் உறுப்பினர், வழிபாட்டுத்தலம் அல்லது மத நிறுவனம் ஒன்று (உதாரணம்: மத கல்வி நிறுவனம், மதத்துடன் தொடர்புடைய நலன்புரி நிலையம்), ஆனால் சமூக/ அரசியல் இயக்கத்துடன் உத்தியோகபூர்வ தொடர்புடைய மதகுருமார்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை அவர்கள் மேலேயுள்ள வகைப்படுத்தலின் கீழ் வருவார்கள்.

(ஆ) பௌத்த பிக்கு – பௌத்த பிக்குகளைக் குறிக்கின்றது

**4.** வணிக நலன்களைக் கொண்ட குழு அல்லது தனியார் துறை நிறுவனம் - உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட தனியார் வர்த்தக நிறுவனத்தைக் குறிக்கின்றது (உதாரணம், இலங்கை கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்), வர்த்தகத் தொடர்பு அல்லது எந்தவொரு வடிவத்தினாலான

வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வேறு ஏதாவது நிறுவனம் அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதற்காக செயற்படும் நிறுவனம்.

## குற்றவாளிகளின் மதத் தொடர்பு

குழு அல்லது தனிநபர் சுய அடையாளம் கண்டு கொண்டால் அல்லது சந்தேகத்திற்கு இடமின்றி அடையாளம் காணப்படக்கூடிய மதத்தொடர்பைக் கொண்டிருந்தால் இந்த வகைப்படுத்தல் பயன்படுத்தப்படுகின்றது. இல்லையென்றால் “தெரியவில்லை” என வகைப்படுத்தப்படுகின்றது.

## குற்றவாளிகளின் இனத் தொடர்பு

குழு அல்லது தனிநபர் சுய அடையாளம் கண்டு கொண்டால் அல்லது சந்தேகத்திற்கு இடமின்றி அடையாளம் காணப்படக்கூடிய இனத்தொடர்பைக் கொண்டிருந்தால் இந்த வகைப்படுத்தல் பயன்படுத்தப்படுகின்றது. இல்லையென்றால் “தெரியவில்லை” என வகைப்படுத்தப்படுகின்றது.

## முதன்மை இலக்கு குழு

பதிவான சம்பவத்தில் யார் முக்கிய இலக்கானார்கள் என்பதை இந்தப் பிரிவு பதிவுசெய்கின்றது. வகைப்படுத்தல்களின் ஆறு பிரிவுகள் சாத்தியமான இலக்குகளை பரந்த நோக்கில் வகைப்படுத்துகின்றன அத்துடன் சம்பவம் ஒன்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட வகைகள் காணப்படலாம்.

முதன்மை இலக்குகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

**1.** தனிநபர்/கள் - இதில் தனிநபர்கள் அல்லது “முதன்மை இலக்குகள்” என பிற வகைப்படுத்தல்களில் இடம்பெறாத தனிநபர்கள், உதாரணம், கிறிஸ்தவ தேவாலய அல்லது சபையின் பணியாளர்

**2.** உள்ளூர் சமூகம் - உதாரணமாக கிராமத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ வீடுகள் அல்லது ஒரு குறிப்பிட்ட பிரிவு கிறிஸ்தவர்களை இலக்காக கொண்டிருக்கலாம்

**3.** வழிபாட்டுத்தலம் - தேவாலயம் அல்லது பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும் வீடு அல்லது இடமாக இருக்கலாம்.

**4.** வர்த்தகம் - கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமான வர்த்தகமாக இருக்கலாம்.

**5.** பரந்த சமூகம் - குறிப்பாக பல அல்லது அனைத்து வகைகளையும் இலக்காகக் கொள்ளும் போது பயன்படுத்தப்படலாம், மொத்தமாக அல்லது நாடு தழுவிய அளவில் கிறிஸ்தவர்களைக் குறிவைக்கலாம்.

**6.** நிறுவனங்கள், மதகுருமார்கள், அதிகாரிகள் அல்லது பிரபலங்கள் - கிறிஸ்தவ பாதிரியார் அல்லது கிறிஸ்தவ நிறுவனம் அல்லது பிற கிறிஸ்தவ பிரமுகர்கள்

## சம்பவம் ஒன்றின் போது காவற்துறையின் நடவடிக்கை

**1.** நேரடியான சம்பந்தம் - சம்பவத்தை நடத்துவதில் நேரடி ஈடுபாடு, எந்தவொரு வடிவத்திலும் குற்றவாளிகளின் செயல்களை அங்கீகரிப்பதன் மூலம் அவர்களது செயலை ஆதரித்தல், சம்பவம் நடந்த பின்னர் அறிவித்தாலும் அது தொடர்பில் உத்தியோகபூர்வ கடமைகளை முன்னெடுக்க மறுத்தல் உள்ளிட்ட நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பவங்களின் குற்றவாளியாக காவற்துறை பங்கு வகித்தால்

**2.** சம்பவ இடத்தில் இருந்தும் அமைதியாக இருத்தல் - காவற்துறை சம்பவ இடத்தில் இருந்தும் மத வன்முறையில் தலையிடாமல் அதனை தொடர அனுமதித்தல்

**3.** சம்பவ இடத்தில் இருந்து தலையிடுதல் - காவற்துறை சம்பவ இடத்தில் இருந்து முதன்மை இலக்குகளை பாதுகாப்பதற்காக தலையிட்டால்

**4.** சம்பவ இடத்தில் காணப்படாமை/ தெரியாது- சம்பவத்தின் போது காவற்துறையினரின் நடவடிக்கை தொடர்பில் எந்தவித குறிப்பும் இல்லாத போது அல்லது சம்பவ அறிக்கையில் நடவடிக்கை தெளிவாக இல்லாத போது

**5.** சம்பவத்தின் பின்னர் தலையிடுதல் - காவற்துறைக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அல்லது சம்பவம் நடந்த பின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தால்

## சம்பவம் ஒன்றின் போது அரசாங்க அதிகாரியின் நடவடிக்கை

அரசாங்க உத்தியோகத்தர் என்பவர் பொலிஸை தவிர அரசாங்கத்தின் எந்த ஊழியராகவும் இருக்கலாம். உதாரணம், பிரதேச சபை, கிராம சேவக பிரிவின் ஒரு உத்தியோகத்தர் முதலானோர்.

**1.** நேரடியான சம்பந்தம் - சம்பவத்தை நடத்துவதில் நேரடி ஈடுபாடு, எந்தவொரு வடிவத்திலும் குற்றவாளிகளின் செயல்களை அங்கீகரிப்பதன் மூலம் அவர்களது செயலை ஆதரித்தல், சம்பவம் நடந்த பின்னர் அறிவித்தாலும் அது தொடர்பில் உத்தியோகபூர்வ கடமைகளை முன்னெடுக்க மறுத்தல் உள்ளிட்ட நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பவங்களின் குற்றவாளியாக அரசாங்க உத்தியோகத்தர் பங்கு வகித்தால்

**2.** சம்பவ இடத்தில் இருந்தும் அமைதியாக இருத்தல் - அரசாங்க உத்தியோகத்தர் சம்பவ இடத்தில் இருந்தும் மத வன்முறையில் தலையிடாமல் அதனை தொடர அனுமதித்தல்

**3.** சம்பவ இடத்தில் இருந்து தலையிடுதல்- அரசாங்க உத்தியோகத்தர் சம்பவ இடத்தில் இருந்து முதன்மை இலக்குகளை பாதுகாப்பதற்காக தலையிட்டால்

**4.** சம்பவ இடத்தில் காணப்படாமை/தெரியாது - சம்பவத்தின் போது அரசாங்க உத்தியோகத்தரின் நடவடிக்கை தொடர்பில் எந்தவித குறிப்பும் இல்லாத போது அல்லது சம்பவ அறிக்கையில் நடவடிக்கை தெளிவாக இல்லாத போது

**5.** சம்பவத்தின் பின்னர் தலையிடுதல் - அரசாங்க உத்தியோகத்தருக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அல்லது சம்பவம் நடந்தபின்னர் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தால்

## வழிபாட்டு இடத்தின் சட்டபூர்வத் தன்மை

2008 ஆம் ஆண்டு அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பதிவு செய்ய வேண்டும் என புத்த சாசன அமைச்சு சுற்றறிக்கை அனுப்பிய பின்னர் வழிபாட்டுத்தலத்தின் சட்டபூர்வத்தன்மை குறித்த கேள்வி அனைத்து சம்பவங்களிலும் வகைப்படுத்தப்பட்டது.

**1.** சட்டம் அல்லது சுற்றறிக்கை இன்றி சட்டபூர்வ தன்மை கேள்விக்குட்படுத்தப்பட்டது - மதவழிபாட்டுத்தலத்தின் சட்டபூர்வத்தன்மை சட்டம் அல்லது சுற்றறிக்கையைக் குறிப்பிடப்படாமல் கேள்வி கேட்கப்படுகின்றது

**2.** சட்டம் அல்லது சுற்றறிக்கையின் அடிப்படையில் கேள்வி கேட்கப்படுகின்றது - மதவழிபாட்டுத்தலத்தின் சட்டபூர்வத்தன்மை சட்டம் அல்லது சுற்றறிக்கையின் அடிப்படையில் கேள்வி கேட்கப்படுகின்றது

**3.** விளக்கம் கோரப்படுகின்றது - வழிபாட்டுத்தலத்தின் சட்டபூர்வத்தன்மை குறித்து கேள்வி எழுப்பப்படுவதுடன் அங்கீகாரத்திற்கான ஆதாரத்தை காட்டுமாறு கேட்பது

**4.** சட்டவிரோதம்/அங்கீகரிக்கப்படாதது என கருதப்படுவது – புத்த சாசன அமைச்சு மற்றும் வயம்ப அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளாமல் தேவாலயம் அல்லது பிரார்த்தனைக் கூட்டத்தினை மதபோதகர் முன்னெடுக்க முடியாது என அரசாங்க உத்தியோகத்தர், உதாரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தால் வழிபாட்டுத்தலம் சட்டவிரோதமானது எனக் கருதப்படும்.

# உசாத்துணைகள்


1. ஜனீன் பெர்னான்டோ மற்றும் ஷாமர வெத்திமுனி, இலங்கையில் மத வன்முறைகள்: பழைய பிரச்சினை ஒன்றுக்கான புதிய பார்வை, டெய்லி FT, 26 மே 2017, http://www.ft.lk/article/617872/Religious-violence-inSri-Lanka:A-new-perspective-on-an-old- problem [last accessed 18 December 2019].

2. கிஹான் குணதிலக்க, "இலங்கையில் அரசியல் அம்சத்தை அகற்றுவதற்கான கட்டமைப்பு வரம்புகள்" (2019) 108 (6) The Round Table: The Commonwealth Journal of International Affairs , 613-624.

3. நீல் டிவொட்டா, "இலங்கையில் ஜனநாயகத்திற்கான வெற்றி", (2016), 27 (1) Journal of Democracy National Endowment for Democracy and Johns Hopkins University Press, பக்கம் 158

4. கிஹான் குணதிலக்க, இலங்கையில் நீண்டகால மற்றும் வேரூன்றிய இன - மத வன்முறை, (ICES 2018), பக்கம் 32

5. நீல் டிவொட்டா, "இலங்கையில் ஜனநாயகத்திற்கான வெற்றி", (2016), 27 (1) Journal of Democracy National Endowment for Democracy and Johns Hopkins University Press, பக்கம் 153

6. கிஹான் குணதிலக்க, இலங்கையில் இன - மத வன்முறையின் அரசியலமைப்பு நடைமுறை, Asian Journal of Comparative Law, 13 (2018), பக்கம் 359

7. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 1

8. வெரிட்டே ரிசேர்ச்சினால் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் பங்களிப்புடன் (NCEASL) இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட அமைதியான அடக்குமுறை: கிறிஸ்தவர்களின் மத சுதந்திரங்களில் கட்டுப்பாடுகள் 1994 – 2014 (2015) என்ற அறிக்கையில் 2010 – 2014 காலப்பகுதிக்குரிய முக்கிய கண்டுபிடிப்புக்களை பார்வையிடலாம்: http://minormatters.org/storage/app/uploads/public/5b5/6f2/ca3/5b56f2ca3b806736825385.pdf [last accessed 18 November 2019].

9. ஆசிரிய தலையங்கம், இலங்கை தேர்தல் தொடர்பில் தி கார்டியனின் பார்வை: ஆபத்துக் காத்திருக்கின்றது, தி கார்டியன், 14 நொவம்பர் 2019, https://www.theguardian.com/commentisfree/2019/nov/14/the-guardian-view-on-sri-lankas-election-danger-ahead?fbclid=I- wAR257omu_JXXEC4KryAIhFYfj-YUPR6OhrH9hDA3VV1Yad5W3fyZ3HK5ue4 [last accessed 18 November 2019].

10. ஆயிஷா சுஹைர், போருக்குப் பின்னரான இலங்கையில் சிங்கள பௌத்த இன – தேசியவாதத்தின் இயங்கு சக்தி (ஏப்ரல் 2016), மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), பக்கம் 20, https://www.cpalanka.org/wp-content/uploads/2016/04/Dynamics-ofSinhala-Bud-dhist-Ethno-Nationalism-in-Post-War-Sri-Lanka.pdf [last accessed 18 November 2019].

11. பெண்கள் மற்றும் ஊடக ஒன்றியம் (WMC) மற்றும் பெண்களுக்கான ஆசிய – பசுபிக் வள மற்றும் ஆராய்ச்சி மையம் (ARROW), இலங்கையில் இன – மத தேசியவாதம் மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகள்: சமூக ஊடகம், அச்சு ஊடகம் மற்றும் கொள்கை மீளாய்வு (2016), பக்கம் 9, https://arrow.org.my/wp content/uploads/2016/08/Interlinkages-Between-Reli- gion-and-SRHR_National-Report_Sri-Lanka.pdf [last accessed 18 November 2019].

12. ஆயிஷா சுஹைர், போருக்குப் பின்னரான இலங்கையில் சிங்கள பௌத்த இன - தேசியவாதத்தின் இயங்குசக்தி (ஏப்ரல் 2016), மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), பக்கம் 6, https://www.cpalanka.org/wp-content/uploads/2016/04/Dynamics-ofSinhala-Bud- dhist-Ethno-Nationalism-in-Post-War-Sri-Lanka.pdf [last accessed 18 November 2019].

13. Anna Stilz ‘குடிமை தேசியவாதம் மற்றும் மொழிக்கொள்கை’, (2009) 37 (3) Wiley Periodicals, Inc. Philosophy and Public Affairs, பக்கம் 257

14. மொஹமட் அகஸ் யூசுவ் மற்றும் ஆதம்பாவா சர்ஜுன், இலங்கையில் போருக்குப் பின்னரான மத வன்முறை, அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை மற்றும் மத ஒற்றுமை (2019) 9 (3) கல்வி மற்றும் சமூக ஆராய்ச்சி இதழ், Mediterranean Center of Social and Educational Research, பக்கம் 212.

15. வெரிட்டே ரிசேர்ச் ‘மத சுதந்திரம் தொடர்பான ஊடக அறிக்கைகளைப் புரிந்துகொள்ளுதல்’ (ஒக்டோபர் மற்றும் நொவம்பர் 2019), http:// www.minormatters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

16. ‘ரஞ்சனின் மேலும் சர்ச்சைக்குரிய குரல் பதிவுகள் வெளிவந்துள்ளன’, ஹிரு நியூஸ், 13 ஜனவரி 2020, http://www.hirunews.lk/232228/ more-controversial-voice-clips-of-ranjan-come-out [last accessed 24 January 2020].

17. கிஹான் குணதிலக்க, இலங்கையில் இன – மத வன்முறையின் அரசியலமைப்பு நடைமுறை, Asian Journal of Comparative Law, 13 (2018), பக்கம் 359 - 387

18. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 64

19. *Ibid*, பக்கம் 62

20. ஹர்ஷன ரம்புக்வெல்ல, The Politics and Poetics of Authenticity: A Cultural Genealogy of Sinhala Nationalism(UCL Press 2018), பக்கம் 37

21. இந்த யோசனையானது வெரிட்டே ரிசேர்ச்சினால் இதற்கு முன்னர் ஊடக பகுப்பாய்வு வாராந்த வெளியீட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, வெரிட்டே ரிசேர்ச்சின் ஊடக ஆய்வு, தொகுப்பு.4 #16 (ஏப்ரல் 21 – 27,2014).

22. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 70

23. ஸ்டான்லி ஜே.தம்பையா, இலங்கை: இன சகோதரச் சன்டை மற்றும் ஜனநாயக நீக்கம், (IB Tauris, 1986), பக்கம் 9

24. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 92

25. வெரிட்டே ரிசேர்ச், ‘மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (செப்டெம்பர் 2019), http://www.minor- matters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

26. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 75

27. *Ibid*. பக்கம் 24 – 27.

28. *Ibid*. பக்கம் 24 – 27.

29. சர்வதேச சிறுபான்மை உரிமைகள் குழு, சகிப்புத்தன்மையை எதிர்கொள்வது: இலங்கையில் சிறுபான்மை மதத்தவர்களுக்கு எதிராக தொடரும் வன்முறைகள், (2016),https://minorityrights.org/wpcontent/ uploads/2016/12/MRG_Rep_SriLan_Dec16.pdf [last accessed 18 November 2019].

30. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக இணையத்தளம், ‘மத மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான விசேட அறிக்கையாளரின் இலங்கைக்கான விஜயத்தின் ஆரம்ப கண்டுபிடிப்புக்கள்’, https:// www.ohchr.org/EN/NewsEvents/Pag- es/DisplayNews.aspx?NewsID=24918&LangID=E [last accessed 30 December 2019].

31. MinorMatters இணையத்தளம், ‘வழிபாட்டுத்தலங்களை பதிவுசெய்யுமாறு மத போதகர்களிடம் கூறும் HQI’, http://minormatters.org/en/crisis-map/ report/hqi-tells-pastor-to-register-place-of-worship [last accessed 30 December 2019].

32. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 77

33. கிஹான் குணதிலக்க, ‘இலங்கையில் அரசியல் அம்சத்தை அகற்றுவதற்கான கட்டமைப்பு வரம்புகள்’ (2019) 108 (6) The Round Table: The Commonwealth Journal of International Affairs , 613-624.

34. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 33 – 34.

35. மத சுதந்திரம் தொடர்பான பத்திரிகை அறிக்கைகளை புரிந்துகொள்வதற்காக minormatters.org க்காக வெரிட்டே ரிசேர்ச் மாதாந்த அறிக்கைகளைத் தயாரிக்கின்றது. இந்த அறிக்கைகள் பொதுமக்கள் பார்வைக்கு கிடைக்கின்றன, http://www.minormatters.org/en/media-pdfs.

36. கிஹான் குணதிலக்க, இலங்கையில் நீண்டகால மற்றும் வேரூன்றிய இன – மத வன்முறை, (ICES 2018), பக்கம் 32

37. தேவசிறி, இலங்கையில் புதிய பௌத்த தீவிரவாதம் மற்றும் இன – மத இணை இருப்புக்கான சவால்கள், (ICES 2016), பக்கம் 37.

38. வெரிட்டே ரிசேர்ச், ஊடக பகுப்பாய்வு, தொகுப்பு 09 வெளியீடு.20 (27 மே – ஜுன் 2019).

39. வெரிட்டே ரிசேர்ச், ‘மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (மே 2019), http://www.minormatters. org/en/media-pdfs [last accessed 18 November 2019].

40. *Ibid.*
தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களம், குடித்தொகை மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பு – 2012 - இறுதி அறிக்கை, http://www.statistics. gov.lk/PopHouSat/CPH2011/Pages/Activities/Reports/FinalReport/FinalReportE.pdf [last accessed 20 November 2019].

41. *Ibid.*

42. வெரிட்டே ரிசேர்ச், ஊடக பகுப்பாய்வு, தொகுப்பு 09 வெளியீடு.20 (27 மே – ஜுன் 2019).

43. இலங்கையில் தவறான தகவல்: ஒரு கண்ணோட்டம் (2017), Groundviews, https://groundviews. org/2017/07/04/ disinformation-in-sri-lanka-an-overview/ [last accessed 20 November 2019].

44. வெரிட்டே ரிசேர்ச், ‘மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (மே 2019), http://www.minormatters. org/en/media-pdfs [last accessed 18 November 2019].

45. வெரிட்டே ரிசேர்ச், ‘மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (மே 2019), http://www.minormatters. org/en/media-pdfs [last accessed 18 November 2019].

46. தரிஷா பஸ்டியன்ஸ், “இது சிங்கள நாடு, சிங்கள அரசாங்கம்’: பொது பலசேனா, டெய்லி FT, 18 பெப்ரவரி 2013, http://www.ft.lk/article/136381/-This-is-a-Sinhala-country--Sinhala-Government---Bodu-Bala-Sena [last accessed 18 December 2019].

47. தம்மிக்க ஹேரத் மற்றும் ஹர்ஷன ரம்புக்வெல்ல, சுயம், மதம், அடையாளம் மற்றும் அரசியல்: சமகால இலங்கையில் பௌத்த மற்றும் முஸ்லிம்களின் சந்திப்பு, (ICES 2015), பக்கம் 7

48. வெரிட்டே ரிசேர்ச், ஊடக பகுப்பாய்வு, தொகுப்பு 09 வெளியீடு.13 (2 – 31 மார்ச் 2019).

49. வெரிட்டே ரிசேர்ச், ஊடக பகுப்பாய்வு, தொகுப்பு 06 வெளியீடு.14 மற்றும் 15 (11 – 24 ஏப்ரல் 2019).

50. வெரிட்டே ரிசேர்ச், ‘மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (பெப்ரவரி 2019), http://www.minor-matters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

51. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னர் வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்கள் (2013), பக்கம் 83, https://s3.amazonaws.com/f.cl.ly/items/3L2T1z0A1G1f3o0m2H3g/Attacks%20on%20Religious%20 Places.pdf [last accessed 18 November 2019].

வெரிட்டே ரிசேர்ச், ‘மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (ஒக்டோபர் - டிசெம்பர் 2018, பெப்ரவரி, மார்ச், ஜுலை மற்றும் செப்டெம்பர் 2019), http://www.minormatters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

52. சர்வதேச நெருக்கடி குழு, இலங்கையின் வடக்கு: சிறுபான்மை உரிமைகள் மறுப்பு நெருக்கடி குழு ஆசியா அறிக்கை, 16 மார்ச் 2012, பக்கம் 17, https://www.srilankacampaign.org/wp-content/uploads/2015/02/Sri-Lanka-s-North-I-The-Denial-of-Minority-Rights-International-Crisis-Group-2012.pdf [last accessed 18 November 2019].

53. சர்வதேச நெருக்கடி குழு, இலங்கையின் வடக்கு: சிறுபான்மை உரிமைகள் மறுப்பு நெருக்கடி குழு ஆசியா அறிக்கை, 16 மார்ச் 2012, பக்கம் 17, https://www.srilankacampaign.org/wp-content/uploads/2015/02/Sri-Lanka-s-North-I-The-Denial-of-Minority-Rights-International-Crisis-Group-2012.pdf [last accessed 18 November 2019].

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னர் வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்கள் (2013), gf;fk; 8>https://s3.amazonaws.com/f.cl.ly/items/3L2T1z0A1G1f3o0m2H3g/Attacks%20on%20Religious%20 Places.pdf [last accessed 18 November 2019]

நதினி வன்னியசிங்கம், கசுன் பதிராஜா, மொஹமட் பஸ்லான் மற்றும் தினுஷ்க ஜயவிக்ரம, இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கு இடையிலான மோதல், (ICES and Equitas 2018), gf;fk; 11 – 15> http://ices.lk/wp-content/uploads/2019/05/Inter-religious- conflict-in-four-districts-of-Sri-Lanka_English.pdf [last accessed 18 November 2019].

54. இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் (NCEASL) தொகுக்கப்பட்ட இந்துக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்களின் சம்பவ அறிக்கை.

55. வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (ஜுலை 2019), http://www.minormatters. org/en/media-pdfs [last accessed 18 November 2019].

56. வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (செப்டெம்பர் 2019), http://www.minor- matters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

57. வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (செப்டெம்பர் 2019), http://www.minor- matters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

58. கிஹான் குணதிலக்க, 'இலங்கையில் அரசியல் அம்சத்தை அகற்றுவதற்கான கட்டமைப்பு வரம்புகள்' (2019) 108 (6) The Round Table: The Commonwealth Journal of International Affairs, 613-624.

59. நீல் டிவொட்டா, சிங்கள பௌத்த தேசியவாத சித்தாந்தம்: இலங்கையில் அரசியல் மற்றும் மோதல் தீர்வுக்கான தாக்கங்கள் (வோஷிங்டன்: East-West Centre 2007), பக்கம் 5.

60. தரிஷா பஸ்டியன்ஸ், ஜின்தோட்ட மற்றும் தீவிரவாதத்தின் நிழல்கள், டெய்லி FT, 23 நொவம்பர் 2017, http://www.ft.lk/opinion/ Gintota-and-the-shadows-of-extremism/14-643843 [last accessed 18 November 2019].

61. ருகி பெர்னான்டோ, திகனவில் முஸ்லிம்களுக்கு எதிரான விசேட அதிரடிப் படையினரின் மிருகத்தனம்: மார்ச் 5, Groundviews, 13 khu;r; 2018> https://groundviews.org/2018/03/13/stf-brutality-against-muslims-in-digana-march-5/[last accessed 18 November 2019].
டொம் அலார்ட் மற்றும் ஷிகார் அனீஸ், இலங்கையின் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் பொலிஸ், அரசியல்வாதிகள் இணைந்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றது, ரொய்ட்டர்ஸ், 25 மார்ச் 2018, https://www.reuters.com/article/us-sri-lanka-clashes-insight/police-politicians-accused-of-joining-sri-lankas-an- ti-muslim-riots-idUSKBN1H102Q [last accessed 18 November 2019].

62. மார்க் ஷுபர்ட், சிறுபான்மை மதத்தவர்கள் மீதான கட்டுப்பாடுகள் அல்லது வன்முறைகள்: சம்பவத்தின் பகுப்பாய்வு, (2009), http://www.minor- matters.org/storage/app/uploads/public/5d3/7fb/10c/5d37fb10ce12e404095654.pdf [last accessed 18 November 2019].
கே. ரத்னாயக்க, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் நாடு தழுவிய ஊரடங்கை அமுல்படுத்தியுள்ளது, WSWS, 14 மே 2019, https://www.wsws.org/en/articles/2019/05/14/sril-m14.html [last accessed 18 November 2019].

63. பியுமி பொன்சேகா, முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் பாதுகாப்பு ஒருங்கிணைப்பை கேள்விக்குள்ளாகின்றன, டெய்லி மிரர், 16 மே 2019, http://www.dailymirror. lk/news-features/Anti-Muslim-attacks-question-security-coordination/131-167256 [last accessed 18 November 2019].

அபூபக்கர் ரமீஸ், இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான இன – மத உணர்வின் மீள்எழுச்சி: அம்பாறை மற்றும் கண்டியில் அண்மையில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு இன – மத உணர்வின் மீள்எழுச்சி: அம்பாறை மற்றும் கண்டியில் அண்மையில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை, (2018), பக்கம் 32, 11 (4) Journal of Politics and Law, Canadian Center of Science and Education.

மொஹமட் அகஸ் யூசுவ் மற்றும் ஆதம்பாவா சர்ஜுன், இலங்கையில் போருக்குப் பின்னரான மத வன்முறை, அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை மற்றும் மத ஒற்றுமை (2019), பக்கம் 217, 9 (3) கல்வி மற்றும் சமூக ஆராய்ச்சி இதழ், Mediterranean Center of Social and Educational Research, பக்கம் 212.

64. இலங்கை மனித உரிமைகள் ஆணையகம், வட மேல் மாகாணம், சிலாபம் மாவட்டம் மற்றும் மினுவாங்கொட நகரத்தில் அண்மையில் இடம்பெற்ற வகுப்புவாத வன்முறைகள், 23 மே 2019, http://hrcsl.lk/english/wp-content/uploads/2019/05/HRCSL-letter-to-IGP.pdf [last accessed 18 November 2019].

65. *Ibid.*

66. வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (ஒக்டோபர் - டிசெம்பர் 2019), http://www.minormatters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

67. வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (ஜுலை 2019), http://www. minormatters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

68. ஹெய்னர் பீல்:.பெல்ட், நசிலா கானியா மற்றும் மைக்கல் வெய்னர், மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரம்: சர்வதேச சட்டத்தின் வர்ணணை (OUP 2016).

கிஹான் குணதிலக்க, இலங்கையில் இன – மத வன்முறையின் அரசியலமைப்பு நடைமுறை, Asian Journal of Comparative Law, 13 (2018), பக்கம் 359

69. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான மத வன்முறை, (Equitas and ICES 2015), பக்கம் 33

70. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உயிரிழப்புக்களை 253 ஆக சுகாதார அமைச்சு திருத்தியுள்ளது, அத தெரன, http://www.adaderana.lk/news/54668/ health-ministry-revises-easter-attacks-death-toll-down-to253 [last accessed 18 November 2019].
வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (ஏப்ரல் 2019), http://www. minormatters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

71. வெரிட்டே ரிசேர்ச், 'மத சுதந்திரம் குறித்த பத்திரிகை அறிக்கையைப் புரிந்துகொள்ளுதல் (ஏப்ரல் 2019), http://www.minormat- ters.org/en/media-pdfs [last accessed 18 November 2019].

72. இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், மாவட்ட ரீதியான இனக்குழுக்களின் சனத்தொகை வீதம், கணக்கெடுப்பு 1981, 2001, 2012, http://www.statistics.gov.lk/Abstract2016/CHAP2/2.12.pdf [last accessed 18 November 2019].

73. இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், மாவட்ட ரீதியான மதக்குழுக்களின் சனத்தொகை வீதம், கணக்கெடுப்பு 1981, 2001, 2012, http://www.statistics.gov.lk/Abstract2016/CHAP2/2.15.pdf [last accessed 18 November 2019].

74. கிஹான் குணதிலக்க, நாள்பட்ட மற்றும் கடுமையானது: இலங்கையில் இன – மத வன்முறைகள், (ICES 2018), பக்கம் 43.

75. *Ibid.*

VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

A| இல.5A, பொலிஸ் பார்க் பிளேஸ், கொழும்பு 5
T |+94 11 - 2055544
E | reception@veriteresearch.org
W|www.veriteresearch.org